
# நகுலேஸ்வரம்



JPL
C8542

...லேஸ்வர ஆதீன வெளியீடு

எதிர்காலத்திய தோரண வாயிலும் கோபுரமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Dr. (Mrs.) S. KANAGASABAI
M. B. B. S. (PERADENIYA, S.L.)
GOVT. MEDICAL OFFICER
(CMC REG. NO. 6443)

DR. AND DR. (MRS)
S. KANAGASABAI,
MATHAGAL EAST,
MATHAGAL.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# நகுலேஸ்வரம்

KOHA
JPL

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி

பண்டிதர் சி. அப்புத்துரை

8542 c.c

202210

202210 c.c.

நகுலேஸ்வர ஆதீன வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

294.5 38

நூல் - நகுலேஸ்வரம்

ஆசிரியர் - பண்டிதர் சி. அப்புத்துரை

உரிமை - ஆசிரியருக்கு

முதற்பதிப்பு - 11.08.2003 தெல்லிப்பழை
ச. ஸ்ரீசோமாஸ்கந்தர்
நினைவு வெளியீடு

இரண்டாம் பதிப்பு - 05.10.2003

கணனி வடிவமைப்பு - கீதா பப்ளிகேஷன்

பதிப்பகம் - நிஷான் பிரின்டேர்ஸ்

வெளியீடு - நகுலேஸ்வர ஆதீனம்.

Title - Naguleswaram

Author - Pandit S. Appudurai

Copy Right - Author

First Edition - 11.08.2003. Tellippalai
S. Sri Somaskanthar
Memorial Publication

Second Edition - 05.10.2003

Type Setting & Designing - Keethaa Publication

Printers - Nisan Printers.

Publication - Naguleswara Atheenam



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நகுலேஸ்வர மூலலிங்கம்



நகுலேஸ்வரப் பாலாலயச் சிவலிங்கம்




நகுலேஸ்வரத் துர்க்கையம்மன்




நகுலேஸ்வர மூலஸ்தான விமானம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நகுலேஸ்வரத்தின்
தெற்கு உட்பிரகாரம்



நகுலேஸ்வரத்தின்
மேற்கு உட்பிரகாரம்



நகுலேஸ்வரத்தின்
வடக்கு உட்பிரகாரம்



நகுலேஸ்வரத்தின்
ஆறுமுகஸ்வாமி கோயில்
(பரிவாரமூர்த்தி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | பதிப்புரை | 05 |
| 2. | முகவுரை | 11 |
| 7. | அணிந்துரை | 14 |
| 8. | கோவிற்கடவை | 18 |
| 9. | சைவாலயங்கள் | 22 |
| 10. | மடங்கள் | 40 |
| 11. | சமாதிக் கோவில்கள் | 44 |
| 12. | கலைவளம் | 46 |
| 13. | கல்வி வளம் | 52 |
| 14. | கீரிமலைச்சிவன் கோவில் 'நாவலர் பிரசுரம்' | 56 |
| 15. | கீரிமலைச்சிவன் கோவில் குமாரசுவாமிப்புலவர் பிரசுரம் | 59 |
| 16. | நகுலகிரிப் புராணம் | 63 |
| 17. | நகுலமலைக் குறவஞ்சி | 64 |
| 18. | நகுலேஸ்வரர் வினோத விசித்திர கவிப்பூங்கொத்து | 65 |
| 19. | ஈழமண்டல சதகம் | 66 |
| 20. | கீரிமலையினிலே | 67 |
| 21. | நகுலேஸ்வரர் திருப்பதிகம் | 68 |
| 22. | நகுலேஸ்வரர் திருவந்தாதி | 69 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. நகுலாம்பிகை சமேத நகுலேஸ்வரப் பெருமான் மீது பாடிய பக்திரசக் கீர்த்தனைகள் 70
24. நகுலாசல புராணம் 71
25. நகுலேஸ்வரர் நான்மணிமாலை 72
26. கீரிமலை வரலாறு 73
27. நகுலேசர் ஊஞ்சல் 74
28. நகுலேஸ்வரர் தசகம் 79
29. இணைப்பு 1 82
30. இணைப்பு 2 83



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

சைவத்தமிழ் வளர்ச்சிக்கும் பண்பாட்டுச் செயற்பாடுகளுக்கும் அருந்தொண்டாற்றிய ஈழத்துப் பழம்பெரும் பதிகளின் வரலாற்றைச் செம்மையாக எழுதிவைத்தால் எம் பின்னோர்க்கும் பெரும்பயன் தரும் என்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய கூற்றாகும். எனினும் இம்முயற்சியில் ஆக்கபூர்வமாகச் செயற்படுவோர் சிலரே.

இந்த வகையில் ஈழத்துப் பழம்பெரும் பதியாகிய கீரிமலை பற்றிப் பல நூல்கள் வடமொழியிலும், தமிழ் மொழியிலும், ஆங்கில மொழியிலும் வெளிவந்துள. எனினும் காலத்துக்கேற்ற வகையில் எல்லார்க்கும் பயன்படக்கூடிய முறையில் ஒரு நூல் சுருக்கமாகவும் விளக்கமாகவும் வெளிவருவது காலத்தின் தேவையாகும்.

கீரிமலையெனும் நகுலேஸ்வரம் அதியுயர் பாதுகாப்பு வலயத்தினுள் அடக்கப்பட்டிருப்பதால் அங்கு அன்பர்கள் குறிப்பிட்ட நேரங்களில் மட்டும் பல கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு வரமுடிகிறது. அங்குவருவோர் நகுலேஸ்வரம் பற்றி அறிவதற்கு ஏற்ற நூல் ஏதாவது உண்டா எனக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்பதும், நாம் அவர்களைத் திருப்திப்படுத்த முடியாதிருப்பதும் அண்மைக்காலத்தில் அடிக்கடி ஏற்படும் சம்பவமாகும்.

நகுலேஸ்வரம் பற்றி, வடமொழியில் சூதசங்கிதை மத்ஸ்யபுராணம், தஷ்ணகைலாய மான்மியம், மகாபாரதம் முதலான நூல்களும், தமிழில் நகுல கிரிப்புராணம், நகுலாசலபுராணம், யாழ்ப்பாண வைபவமாலை, யாழ்ப்பாண வைபவ கௌமுதி, மற்றும் நகுலேஸ்வர குரு பவள விழாமலர் நகுலேஸ்வர வரலாறும் நான்மணிமாலையும் முதலான நூல்களும் எழுந்துள்ளன.

இவை நகுலேஸ்வரம் பற்றிய அரும்பெரும் தகவல்களையெல்லாம் தம்முள் கொண்டுள்ளன. இந்நூல்களையெல்லாம் தேடி எடுத்து ஆழக்கற்றுணர வாய்ப்பில்லாத இக்காலகட்டத்தில் நகுலேஸ்வரம் பற்றிய தகவல்களையெல்லாம் திரட்டித் தருவதான இந்த நூல் மிக வேண்டப்படுவதொன்றாகும்.

இவ்வீழ நாட்டில் உள்ள தீர்த்தங்கள் எல்லாவற்றிலும் மிகச் சிறந்த தீர்த்தம் யாழ்ப்பாணத்துக் கீரிமலையிலுள்ள சாகரசங்கமம் எனும் தீர்த்தமேயாகும். தெற்கில் ஊறுகின்ற சுத்தசலமும் வடக்கில் ஊறுகின்ற உப்புச் சலமும் கலந்து சிவரூபமும் சக்தி ரூபமுமாய்ச் சங்கமமாவதால் உடல் நோயை மட்டுமன்றி உளநோயாகிய மலபந்தங்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீக்கவல்லது இத்தீர்த்தம்.

கிருதயுகத்திலே கீரிமுகமுடைய நகுலமுகன் என்பவர் முசுகுந்தராசனுடனே வந்து இத்தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்தமையால் கீரிமுகம் மாறப்பெற்றார். இதனால் கண்டகி தீர்த்தம் கீரிமலைத் தீர்த்தம் எனவும் திருத்தம்பலேஸ்வரம் கீரிமலை எனவும், திருதம்பலேஸ்வரர் நகுலேஸ்வரர் எனவும் (நகுலம்-கீரி) வழங்கப்படுவதாயிற்று.

திரேதயுகத்திலே இராவண சங்கார காலத்தில் அவனுடைய அற்புதமாகிய வீணையைச் சுசங்கீதன் எனுங் கந்தர்வன் கவர்ந்து கொண்டு மனித ரூபமுடையவனாகி வந்திருந்து அத்தீர்த்தத்திலே ஸ்நானஞ் செய்து அப்பெருமானைத் தரிசித்து வீணாகானம் செய்தான். அதனால் இத்தலம் வீணாகானபுரம் எனும் பெயர் பெற்றது.

துவாபரயுகத்திலே நளமகாராசன் இங்கு வந்து தீர்த்தமாடிச் சுவாமி தரிசனம் செய்து கலி (சனி) நீங்கப்பெற்றான். அர்ச்சுனன் தீர்த்த யாத்திரை வந்து தீர்த்தமாடி வரம் பெற்றான்.

கலியுகத்திலே வங்கதேசத்திலிருந்து விசயராசன் வந்து நகுலேசர் கோயிலைப் புதுப்பித்தான். திசையுக்கிரசோழன் மகளாகிய மாருதப்பிரவல்லி இங்குவந்து நீராடிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குன்மநோயும் குதிரை முகமும் நீங்கப்பெற்றாள்.

இப்படியே யுகந்தோறும் பற்பல தேவர், முனிவர், அரசர், கந்தருவர் முதலியோர் வந்து தீர்த்தமாடித் தரிசித்துப் பற்பல சித்திகளையும் அடைந்தார்களென்று தட்சணகைலாய புராணத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

இவ்வித பெருமைக்குரிய நகுலேஸ்வரரின் அநாதியான கோயில் கடல்கோள் காரணமாகக் கடலுள் அமிழ்ந்துவிட்டது.

அதன்பின் உருவான இரண்டாவது கோயில் 1621 அளவில் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய போர்த்துக்கேயர் ஈழத்திலிருந்த சைவாலயங்கள் அனைத்தையும் தரைமட்டமாக்கி அழித்தபோது அழிவுண்டது.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் 1878இல் விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து மூன்றாவது கோயில் எழுந்தது. 1918ஆம் ஆண்டு கோயில் திருவிழாவின் போது ஏற்பட்ட தீ காரணமாகக் கோயில் எரிந்து மீண்டும் புனரமைக்கப்பட்டது. ஈழப்போர் காரணமாக 1990 அக்டோபர் 16இல் கேதாரகௌரி விழாவின் போது விமானக் குண்டு வீச்சினால் கோயில் அழிவுக்குள்ளானது. அனைவரும் இடம்பெயர்ந்து பத்து ஆண்டுகளின் பின்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீளக்குடியமர அனுமதிக்கப்படாத நிலையில் விசேட அனுமதிபெற்று 2000ஆம் ஆண்டிலிருந்து புனரமைப்புப் பணிகள் தொடர்கின்றன. 2001 ஆனி உத்தர நாளில் பாலஸ்தாபனம் செய்யப்பட்டுள்ளது. 1982இல் அடிக்கல் நாட்டப்பட்ட 108 அடி உயரங்கொண்ட இராசகோபுர வேலையுடன் கோயில் திருப்பணிகள் புதுப்பொலிவுடன் தொடர்கின்றன. எம்பெருமான் கிருபையால் உலகளாவிய நாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் நகுலேஸ்வர அடியார்களின் உதவியாலும் அரசாங்க உதவியாலும் நகுலேஸ்வரம் மீள் உருவாக்கம் பெற்றுக்கொண்டிருக் கின்றது.

நகுலேஸ்வரத்தில் மக்கள் மீளக்குடியேறி, மகா கும்பாபிஷேகம் காணும் நாளை எதிர்பார்த்து அன்பர்கள் காத்திருக்கின்றார்கள்.

இவ்வேளையில் ஆலயத்தின் வரலாற்றை அனைவரும் அறிந்துகொள்ளக்கூடியதான 'நகுலேஸ்வரம்' எனும் நூலை நகுலேஸ்வர பக்தரான மயிலங்கூடல் பண்டிதர் சி. அப்புத்துரை அவர்கள் உருவாக்கித் தந்துள்ளார்கள். இவர் தமிழர் திருமணம், திருமணக் கிரியை விளக்கம், சைவசமய அபரக்கிரியை விளக்கம், திருவாசக அமுதம், அமுதமொழி, நற்சிந்தனை நாற்பது, நகுலேசர் நான்மணிமாலை முதலான பல நூல்களின், மலர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியராவார். இவர் இந்த நூலைக் காலத்திற்கேற்ற விதத்தில் எழுதியிருப்பது நகுலேஸ்வரப் பெருமானின் கிருபையேயாகும்.

இந்த நூலை நகுலேஸ்வர ஆதீனவெளியீடாகப் பதிப்பித்து வெளியிடுவதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன். இந்த நூல் மூலம் வரும் நிதி முழுவதும் திருப்பணிக்கே பயன்படும். அன்பர்கள் இந்நூலைப்பெற்று நகுலேஸ்வர மூர்த்தி, தல, தீர்த்த விசேடங்களையறிந்து திருப்பணியிலும் பங்குகொண்டு பயன்பெற எல்லாம்வல்ல பெருமான் அருள்புரிவாராக.

நகுலேஸ்வர ஆதீனம்
கீரிமலை.

**ராஜராஜஸ்ரீ நகுலேஸ்வரக் குருக்கள்**
(ஆதீனகர்த்தாவும் பிரதம குருவும்)

05.10.2003
(சுபானு வருட விஜயதசமி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

ஈழநாட்டுச் சிறப்பு மிக்க சிவத்தலங்களுள் ஒன்று நகுலேஸ்வரம். சிறப்பான ஈஸ்வரங்கள் ஐந்தனுள், இது இரண்டாம் இடத்தைப் பெறுவது. மூர்த்தி தலம், தீர்த்தம் என்னும் பேறுகளைத் தன்னகத்துக் கொண்டு உயர்ந்து நிற்பது அத்தலம். ஒரு காலத்திற் திருத்தம்பலேஸ்வரம் என்றழைக்கப்பட்ட இந்த நிலப்பரப்புப் பின்னொருகால் கோவிற்கடவை எனப்பட்டது. இன்றுள்ள மாவிட்டபுரம், காங்கேயன்துறை கீரிமலை என்னும் நிலப்பரப்புக்களை உள்ளடக்கியது தான் அன்றைய கோவிற்கடவை என்று தெரிகிறது. அன்றைய கோவிற்கடவையின் எல்லை, அப்பகுதியில் வாழ்ந்த மக்கள் கூட்டம், மாவிட்டபுரம், நகுலேஸ்வரம் ஆலயப் பணிகளில் அவர்களுக்கிருந்த உரிமைகள், அவ்விடத்திய மக்களின் இயல்பு வாழ்க்கை முதலான விடயங்களெல்லாம் மேலும் மேலும் சிந்திக்கப்பட வேண்டியவை. குமாரத்திபள்ளம், வெளவாற்புரை, சடையம்மா சமாதிச் சூழல், அதன் மேற்கேயுள்ள தென்னந்தோப்புப் போன்ற சமாதிகளின் மையம், என்றுள்ள இடங்களெல்லாம் அகழ்வாராய்ச்சிக்கு உள்ளாக வேண்டும். இவ்வண்ணமாய சிந்தனைகள் மூலந்தான் உண்மைகளை ஓரளவு கண்டறிய முடியும். நகுலமுனிவர் காலத்தின் பின்னாய நகுலேஸ்வரரைத்தான், அப்பெயராற் சுட்டப்படும் இறைவனைத்தான், இன்று நாங்கள் தரிசிக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றுவரை கிடைத்துள்ள ஆதாரங்கள், வரலாறுகள் பூரணமானவையன்று. ஆங்காங்கு கிடைத்துள்ள வாய்மொழிச் சான்றுகள், இலக்கியச் சான்றுகள். கண்கண்ட சான்றுகள் கொண்டுதான் இந்த நூலாக்கம் நிகழ்ந்துள்ளது. இது நிறைவான பூரணத்துவம் பெறவேண்டுமெனில் தேடல் தொடரவேண்டும்.

நகுலேஸ்வர வரலாற்றை நாமறிய ஒரு வாய்ப்பினை உண்டாக்கவேண்டுமென நகுலேஸ்வரர் ஆலயத்திற்கு வருகை தருவோர் ஆலய முதல்வர் ராஜராஜஸ்ரீ கு.நகுலேஸ்வரக் குருக்களை வேண்டியுள்ளனர். குரக்களையா அவர்கள் அந்த வேண்டுதலை எம்மிடம் சமர்ப்பித்தார்கள். அத்துடன் சில நூல்களையும் பிரசுரங்களையுங் கூடத் தந்துதவினார்கள். அந்த ஊக்குவிப்பை நகுலேஸ்வரப் பெருமானின் அருளாணை என மதித்து இதனை எழுத முயன்றுள்ளோம்.

இந்த நூல் உருவாவதற்கு உதவியவர்களை இந்தவேளை நாம் நினையவேண்டியது தவிர்க்கமுடியாதது. இளவாலை சைவப்புலவர் சு. செல்லத்துரை, மயிலங்கூடலூர்ப் பி. நடராஜன், கீரிமலை சிவநாராயணக் குருக்களின் துணைவியார் கல்பனாகௌரி, நாதஅலை சங்கீதரத்தினம் மு. வர்ணகுலசிங்கம், அவர் துணைவியார் மகேஸ்வரி அம்மையார், கொல்லங்கலட்டிச் சட்டவல்லுநர் வி.எஸ். கணேசலிங்கம், நல்லூர் திருமதி நித்தியவதி நித்தியானந்தன் (இந்து நாகரித்துறைச் சிறப்புப் பட்டதாரி), கீரிமலை நவரத்தினம் பரமேஸ்வரன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெல்லிப்பழை ஸ்ரீ.கார்த்திகைக்குமரன் சரவணமுத்து என்போர் என்றும் என்மனதில் உறைபவர்கள். தம் பொன்னான நேரத்தை இந்த நூலுடன் செலவுசெய்து பொறுமையாக வாசித்து நல்லதோர் அணிந்துரை வழங்கியவர் இந்து சமய கலாசாரத் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் அவர்கள். நூலைப் பதிவிற்குரியதாக்கிய குருக்களையா அவர்கள் நகுலேஸ்வரர் திருவருளுடனாகி நிற்பவர்கள். அழகுற அச்சிட்டு இந்நூலை வெளிக்கொணர்ந்தவர்கள் கொழும்பு கீதா பதிப்பகத்தினர். எல்லோர்க்கும் நகுலேஸ்வரர் திருவருள் நோக்குக் கிடைப்பதாக.

சி. அப்புத்துரை

மயிலங்கூடல்,
இளவாலை,
ஸ்ரீலங்கா.

கொழும்பில்:
18/1, 9th Lane,
Wasala Road,
Colombo-13.
Sri Lanka.
Tel : 2341083.

8542 c.c

JPL

202210



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

ஒரு கிராமத்தின் சமய சமூக பண்பாட்டு நாகரிகக் கோலங்களை அறிய வேண்டுமெனில் அக்கிராமம் பற்றிய சகல தகவல்களுந் தொகுத்துப் பார்க்கப்பட வேண்டும். சுருக்கமாகச் சொல்வதெனில் குறித்த கிராமம் பற்றிய நிறைவானதொரு ஆய்வு நிகழ வேண்டும் என்பது. கிராமத்தின் செய்திகள் ஒவ்வொன்றினையும் தெளிவானவையாகக் கண்டுகொள்ள முயலவேண்டும். இந்த விழிப்புடனாகிய மக்கள் சிலர் தத்தங் கிராமங்கள் பற்றிச் சிந்திக்கத் தலைப்பட்டுள்ளனர். அண்மைக் காலமாகச் சில கிராமங்கள் பற்றிய வரலாறுகளைக் கண்டுகொள்ளும் வாய்புங் கிடைத்துள்ளது. புகழ்பூத்த நீர்வேலி, வேலணை வரலாறு, கோப்பாய் வரலாறு முதலியன எமது சிந்தனைக்கு உரமூட்டுவன.

இந்த வகையைச் சார்ந்ததுதான் நகுலேஸ்வரம் என்னும் இந்த நூலும் எனலாம். ஆனாற் சிறியதொரு வேறுபாடு. இந்த நூல் நகுலேஸ்வரத்துடன் கூடிய சைவ வாழ்வை, வழிபாட்டு வாழ்வை மையமாகக் கொண்டமைந்ததெனலாம். சில ஆண்டுகளின் முன் மகாராஜஸ்ரீ து. சண்முகநாதக் குருக்கள் எழுதி வெளிக்கொணர்ந்த மாவிட்டபுரத் தலவரலாறு என்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலும் இந்த வகையினதெனலாம். ஈழநாட்டில் அமைந்துள்ள சைவாலயங்களுடனான கிராமங்கள னைத்தும் இத்தகைய பார்வைக்குள்ளாக வேண்டும். எதிர்கால ஆய்வாளர்களின் தேட்டத்திற்கு வழிசமைப்பனவாய் இவை பின்னர் பயன்படும்.

மண்ணை நேசித்தவர்கள் இந்தக் கீரிமலை மண்ணில் வாழ்ந்திருக்கிறார்கள். அவர்கள் தமது கிராமத்தின் உரத்தை வலுப்படுத்தக்கூடியவகை வாழ்ந்திருக்கிறார்கள். அவர்கள் செயற்றிறன்களைக் கண்டுகொள்ள இப்போது முயன்று கொண்டிருக்கின்றனர். அந்த முயற்சியின் பயனாகக் கிடைத்தவை சிலவற்றையே இங்கு ஆவணமாக்கியுள்ளனர்.

பண்டை நாளைய கல்விவளம், கலைவளம், நிலவளம், கட்டிட வளம், வழிபாட்டு வளம் என்பனவாய தகவல்களை இந்த நூலிலே காணுகின்றோம். இவற்றை எழுதி வைக்கவேண்டுமென்று முன்பு யாரும் முயன்றதில்லை. அல்லது முயன்று எழுதப்பட்டது எமக்குக் கிட்டவில்லை. இன்று இந்த வரலாறு தொகுக்கப்பட வேண்டுமென்று சிந்தித்தவர் பண்டிதர் சி. அப்புத்துரை அவர்கள். அவர் கீரிமலைக்கு அண்மையதான மயிலங்கூடலைச் சேர்ந்தவர். நகுலேஸ்வரப் பெருமானிடம் அளப்பரிய பற்றுக்கொண்டவர். இந்த நூலாக்கத்திற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக மிகப் பொருத்தமானவர். நகுலேஸ்வர வழிபாட்டினைப் புரிய வைப்பதாக இந்த நூலமைப்பு நிகழ்ந்துள்ளது என்று சொன்னாலும் தவறாகாது. அது காரணமாக வணக்கத்துடனாகியிருந்த பழைய வரலாறுகளைத் தெளிவாக இங்கே காணமுடிகிறது.

இப்பொழுது தோற்றம் பெறும் நகுலேஸ்வரர் ஆலயம் அதன் நான்காவது படிநிலை வளர்ச்சியாகலாம் என்று நினைக்கத் தோன்றுகின்றது. காலந் தெரியாத காலத்துத் தொடங்கப்பட்ட ஆலயம் சடையம்மா சமாதிக்கு அண்மையாகவிருந்து கடல் கோளாற் கொள்ளப்பட்டபின் புதிதாக ஒன்றெழுந்தது. ஃ'நு போர்த்துக்கேயரால் தரைமட்டமாக்கப்பட்டது. பின்னர் ஸ்ரீலஸ்ரீ நாவலர்பெருமான் ஊக்குவிப்பால் மெல்ல மெல்ல நல்லதோராலயம் வளர்ந்தது. அது தீக்கிரையாகிய பின் மீண்டும் வளர்ந்து வந்தது. இன்றைய போர்ச் சூழல் நிலைமையை மோசமாக்கிவிட்டது. பாரிய அழிவிற்குள்ளாகிய ஆலயம் மீண்டும் புனர்நிர்மாணம் பெறுகின்றது. காலத்திற்குக் காலம் ஏற்பட்ட அழிவு நிலைகளால் ஒரு தேக்கம் ஏற்பட்டதாக வரலாறு இல்லை. இங்கேதான் நகுலேஸ்வரரின் அற்புதத்தை எம்மால் உணரமுடிகின்றது. அதேவேளை மீண்டுந் தொடங்கும் மிடுக்கு என்று ஈழத்து மகாகவி எழுதிய எழுத்தின் ஆற்றலை இன்று எம்மாற் சிந்திக்கவும் முடிகின்றது. ஸ்ரீலஸ்ரீ நாவலர் பெருமான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகிரங்கப்படுத்திய துண்டுப் பிரசுரங்களிற் கண்டவாறு எம்மால் முடிந்த உதவியைச் செய்து ஆலய வளர்ச்சியைக் காண முயலுவோம்.

வழிபாட்டுடனாகிய ஏனைய சைவாலயங்கள் சைவப் பொலிவுடனாகியுள்ள மடங்கள், ஞானிகளை நினைவுகூர வைப்பனவாகிய சமாதிகள் எல்லாம் தெளிவாகச் சிந்திக்கப் பட்டுள்ளன. அந்த நிலைகளும் பேணப்பட வேண்டிய வையே! அவற்றின் அனுசரணை புனிதவாழ்வை வளம்படுத்தும். சமாதிகளில் சிவலிங்கப் பிரதிட்டை செய்து நாளும் அர்ச்சிப்பு நடந்திருக்கிறது. அது தொடரவேண்டும்.

நகுலேஸ்வரர் ஆதீன முதல்வர் நல்ல சிந்தனைச் செல்வராகத் தூரநோக்குடையவராகிச் செயற்படுகின்றார். நகுலேஸ்வரம் பற்றிய சிந்தனை இன்னும் வளரவேண்டும். அந்த நகரப் புனிதம் பேணப்படவேண்டும். சைவ உலகின் தலைநகராக அது விளங்கவேண்டும் என்பனவாய அவர் ஆவல் நிறைவுகண்டு சைவ உலகின் வளம் எங்கும் பரிமளிக்க வெண்டும்.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி

**சாந்தி நாவுக்கரசன்**
பணிப்பாளர்
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்
கொழும்பு-04.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம

# கோவிற்கடவை

**தோற்றுவாய்:**

கோவில்கள் நிறைந்துள்ளதொரு நிலப்பரப்பு என்னுங் குறியீட்டளவில் கோவிற் கடவை என முன்பு ஒரு பகுதி அழைக்கப்பட்டதென வரலாறு குறிப்பிடுகின்றது. அது கீரிமலை, மாவிட்டபுரம் காங்கேயன்துறை என்னுங் கிராமங்களை அடக்கியதாக இருந்ததென்றுந் தெரிகிறது. அன்று திருத்தம்பலேஸ்வரம் என்றழைக்கப்பட்ட கீரிமலைப் பகுதியை வந்தடைந்த விஜயன் திருத்தம்பலேஸ்வரர், திருத்தம்பலேஸ்வரி, கதிரையாண்டவர் கோவில்களைப் புனர்நிர்மாணஞ் செய்து இலங்கையின் கிழக்கு மேற்கு தெற்கு என்னுந் திசைகளிலும் சிவாலயங்களைத் தாபித்த வேளையிற்றான் இந்தக் கோவிற்கடவை என்னும் பெயர்ப் பதிவு இடம்பெற்றிருக்க வேண்டுமென்று நினைக்க வேண்டியுளது. சிவாலயங்கள் நிறைந்த பிரதேசம், சிவ வழிபாட்டிற்கு வாய்ப்பான பிரதேசம் என்னுங் கருத்துப் பொதிவுடன் தான் அப்பெயர் வழக்குப் புழக்கத்திற்கு வந்திருக்கலாம்.

> *'கோவில் தோன்றிய காரணத்தாற் கோவிற்கடவை என்னும் பெயரைப் பெற்றது. கீரிமலை, காங்கேசன்துறை, மாவிட்டபுரம் ஆகிய மூன்று இடங்களையும் உள்ளடக்கிய பகுதி கோவிற்கடவை என்று வழங்கப்படுவதை இன்றுங் காணலாம். இந்த மூன்று இடங்களின் சரித்திரமும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து இருப்பவையாம்'*

என்று திருக்கேதீஸ்வரம் 1976 ஜுலை நான்கு, கும்பாபிஷேக மலரில் முத்து என்பவர் எழுதியுள்ள நகுலேஸ்வரம் என்னுங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரையிற் குறிப்பிடப்பட்டுள்ளது. (பக்கம் 190). 1949இல் வெளியாய குல சபாநாதன் பதிப்பாய யாழ்ப்பாண வைபவ மாலை பக்கம் 6 - 7 இலும் இச்செய்தி காணப்படுகின்றது.

குறிப்பிட்ட இந்த நிலப்பரப்பு விஜயன் வருகைக்கு முன் திருத்தம்பலேஸ்வரம் என்றுதான் அழைக்கப்பட்டிருக்கிறது. வீணாகானபுரமென்று அழைக்கப்பட்டது இதற்கும் முந்திய காலத்தாகலாம். அதாவது இராமாயண காலத்தின் இறுதியை அண்டிய காலமாகலாம். நகுலமுனிவரது கீரிமுகம் சுபாவமுகமாகிய காலத்திருந்துதான் கீரிமலை என்னும் உபயோகம் வழக்கிற்கு வந்திருக்க வேண்டும். மாருதப்புரவீக வல்லியின் குதிரை முகம் சுபாவ முகமாகிய வேளையிலிருந்துதான் மாவிட்டபுரம் என்னும் பெயர் உதயமாகியிருக்க வேண்டும். மாவிட்டபுரத்தில் ஒரு முருகன் ஆலயத்தைத் தாபிக்க வேண்டி முருகன் திருவுருக்களைத் தருவிக்க அவை வந்திறங்கிய துறை காங்கேயன்துறை என்றாயினதாகலாம்.

**ஆலயங்கள்:**

கோவிற்கடவை என்று அன்று குறிப்பிடப்பட்ட பகுதி ஒரு சிறப்பான பகுதியென்றுதான் சொல்ல வேண்டும். அங்கு நிர்மாணம் பெற்ற ஆலயங்கள் பலவும் தெய்வீகப் பரிமளிப்பு வாய்ந்தவை. திருத்தம்பலேசுவரர் என்றழைக்கப்பட்ட நகுலேஸ்வரர், பல அற்புதச் செயல்களுக்குக் காரணராய அற்புத மூர்த்தி. மாவைக்கந்தன், குதிரை முகத்தை நீக்கிக் குன்ம வியாதியைப் போக்கியருளியவர். மலைப்பகுதியுறை கண்ணன், அசையாது நின்ற கப்பலை நகர்த்தியவர். கொல்லங்கலட்டி வீரகத்தி விநாயகர், இளவாலை ஆனை-விழுந்தான் ஆலயம் இரண்டும் மாருதப்புரவீகவல்லியின் அமைப்புக்கள் என்பது வரலாறு. இன்னும் ஆங்காங்குள்ள ஆலயச் சிறப்புக்கள் பலப்பல. மக்கள் வாய் மொழி மூலமாகக் கேட்டறிய முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடிப்பரம்பல்:

ஆலயங்களுடனான கடமைக்கு, திருத்தொண்டுக்கு உரியவர்களான மக்கட் பரப்பையும் இந்தக் கோவிற்கடவைப் பிரதேசத்திலே நிறைவாகக் காணமுடியும். கோவிற்கடவையின் வடக்கெல்லை கடலாக அமைந்துவிட்டது. கிழக்கு காங்கேசன்துறை யாழ்நகர் வீதியைக் கொள்ளலாம். முருகனாலயத்திற்கு வடக்கில் கிழக்கு நோக்கி இருநூறு மீற்றர் வரை சென்று குமார கோயிலையும் உள்ளடக்கி இன்னும் கிழக்காகி மாவை முருகன் ஆலயத்தின் கிழக்கெல்லையாகி தெற்கு நோக்கி வீணிய வரை அம்மன் கோயில் வரை செல்லும் பின்பு தென்புறந்திரும்பி மாப்பாண தெரு, பட்டிக்கடவை, வீரகத்தி விநாயகர் ஆலயப்பகுதி, என்பவற்றை உள்ளாக்கி விழிசிட்டி, இளவாலையின் வடக்குப்புறம், மயிலங்கூடல், நாத அலை, கருகம்பனை என்பவற்றுடனாகிக் கோவிற்கடவை அமையும். போயிட்டி, மாங்கொல்லை, வல்லிகிணற்றடி, தச்சன்தோப்பு, கூவில் என்னும் பகுதிகளெல்லாம் உள்ளடக்கம்.

இந்தச்சுற்றுவட்டத்துள் அந்தணர் மாவை முருகன் தென்புறச் சூழலிலும் கீரிமலை சிவன் ஆலயச் சூழலிலும் உள்ளனர். வீரசைவர்கள் கீரிமலையின் வடபாலிலும், பொற்கலந்தம்பை, நாதஅலை என்னுமிடங்களிலுமுளர். இசை வேளாளர் மாவிட்டபுரச் சுற்றாடலில் நிறைவாக உள்ளனர். கோயிலுக்கு வெள்ளை கட்டுதல் முதலிய கருமங்களில் ஈடுபடுபவர்கள் மாவை முருகனாலயத்திற்குத் தென் மேற்கிலுள்ளனர். பூஜைத்திரவியங்களை வழங்கும் பொன்மனச் செல்வர்கள் கோவிற்கடவை முழுமையிலும் பரம்பலாக உள்ளனர். பண்ணிசைபாடும் ஓதுவார்கள் விழிசிட்டியைச் சார்ந்தவர்களாக இருந்துள்ளனர். யாம் அறிந்தவரை கடந்தநூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் திரு. செ. சிவசுப்பிரமணியம், திரு. இ. நமசிவாயம், பண்டிதர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வே. சங்கரப்பிள்ளை, திரு. ஆறுப்பிள்ளை முதலானோர் தொடர்புள்ளவர்களாயிருந்துள்ளனர்.

**சிறப்பான இடப்பெயர்கள்:**

காங்கேயன்சீமா, வீணியவரை, மாப்பாணர்தெரு, பட்டிக்கடவை, காயாத்துறை, செம்பொன்வாய்க்கால், சங்கொல்லை, வவ்வால்புரை, மயிலப்பை மயிலங்கூடல், மயிலாடு கொக்கன், மயிலாடுதுறை ஆனைவிழுந்தான், குமாரத்திபள்ளம், வல்லிகிணற்றடி என்பனவாய பெயர்களைச் சிந்தனைத் தூய்மையுடனாகித் தெளிய முயற்சிப்பது நல்லது.

**மடங்கள்:**

கீரிமலையிலுள்ள மடங்கள் திருத்தம்பலேசுவரர் காலத்தவையாக இருக்கமுடியாது. அவையெல்லாம் நகுலேஸ்வரர் காலத்துடனும் அதற்குப் பிற்பட்டுந் தோன்றியவை. மாவை முருகனாலயத்துடனும் அதன் தெற்கு மேற்கு வடக்கு வீதிகளிலும் உள்ளவை காலம் பற்றி எதுவுஞ் சொல்ல முடியவில்லை. கொல்லங்கலட்டித் துவஜாரோகண-மடம் முந்தியதாக இருக்கலாமா? ஆய்விற்குரியது. பிற்காலத்தில் அந்த மடத்திலேதான் ஆன்ம ஈடேற்றக் கிரியைகளுக்கான சைவக் குருக்கள் அமர்த்தப்பட்டார்.

**நகுலகிரிப்புராணம்**

வையமீதினி லுயிர்களுக் கிகபரம் வழங்கத்
தையலாணகு லாம்பிகை தணந்திடா தமரச்
செய்யமேனிகொண் டமர்ந்தரு ளுதவுதெய் வீகத்
தூய்யதோர்நகு லேசன திருபதந் துதிப்பாம்.

*கடவுள் வாழ்த்து - நகுலேசுரர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவாலயங்கள்

## நகுலேஸ்வரர் ஆலயம்:

கீரிமலைச் சிவன் கோவில் என்று பலராலும் அழைக்கப்படும் நகுலேஸ்வரர் ஆலய வரலாற்றினை, அந்த வழிபாட்டின் ஆரம்ப காலத்தினைக் கண்டுகொள்வதென்பது முடியாததொன்று. பாரத இராமாயண இதிகாசங்களின் நாயகர்களான அருச்சுனன், இராமன் என்போரும் நளன் முசுகுந்தன் என்போரும் இந்த ஆலயத்தில் வழிபட்டதாகச் செய்தியுண்டு. கி.மு. ஐந்தாம் நூற்றாண்டுக் காலத்தினனான விஜயன் இந்த ஆலயத்தைப் புனருத்தாரணஞ் செய்த செய்தியும் உண்டு.

நகுல முனிவரின் வருகைக்கு முன் இந்த நிலப்பரப்புத் திருத்தம்பலேசுவரம் என்னும் பெயருடன் இருந்திருக்கிறது. இங்குள்ள இறைவன் திருத்தம்பலேசுவரர் என்றும் இறைவி திருத்தம்பலேசுவரி என்றும் அழைக்கப்பட்டனர். நகுல முனிவரின் கீரிமுகம் மாறிச் சுபாவ முகமாயின தாக்கம் தலப் பெயரிலும் மாற்றத்தை உண்டாக்கிவிட்டது. திருத்தம்ப லேசுவரம் கீரிமலை என்றாயது. அவ்விடத்துறைந்த இறைவன் திருத்தம்பலேஸ்வரர் நகுலேஸ்வரர் என்றழைக்கப்பட்டார். திருத்தம்பலேசுவரி நகுலாம்பிகையன்னை ஆயினள். நகுலம் என்பது வடமொழி. கீரி தமிழ்ச்சொல். நகுல முனிவர் வழிபாடு செய்த இடம் கீரிமலை என்றும் நகுலேச்சரம் என்றும் பெயர் பெற்றது என்பது ஐதீகமாக இருந்து வருகிறது என்று நகுலேஸ்வர குரு பவள விழா மலரிற் கீரிமலைச் சிவன் கோவில் அன்றும் இன்றும் என்னுங் கட்டுரையில் யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் இந்து நாகரிகத்துறைத் தலைவர் ப. கோபாலகிருஷ்ண ஐயர் குறிப்பிட்டுள்ளார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1505இல் இலங்கையுள் வேற்று நாட்டவர்கள் புகுந்தனர். வர்த்தக நோக்குடன் வந்தவர்கள் மெல்ல மெல்ல அரசியலிலும் காலூன்றத் தொடங்கினர். 1578 வரையில் பெரும்படையுடன் வந்தவர்கள் கரையோரப் பட்டினங்களை-யெல்லாம் கைப்பற்றிக்கொண்டனர். கரையோர ஆட்சியைத் தமதாக்கிக் கொண்டவர்கள் சைவக் கோவில்களையெல்லாம் தரைமட்டமாக்கினர். 1621 இற்றான் யாழ்ப்பாணம் அவர்கள் ஆட்சிக்குள்ளாகியது. நகுலேசுவரம் மாவிட்டபுரம், நல்லூர் முருகன் ஆலயம் எல்லாம் இடித்தழிக்கப்பட்டன. மூன்று பிரகாரங்கள் ஐந்து கோபுரங்கள் என்பவற்றுடன் உயர்ந்த கட்டிடக் கலையையுங் கொண்டதாக விளங்கிய கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயம் ஐயோ! அந்தப் படுபாவியரின் கைவண்ணத்தில் தரைமட்டமாகியது. நினைக்கவே உள்ளம் பதறுகிறது.

அந்த வேளை, மனத்தில் உரத்தை வருவித்துக்-கொண்ட பரசுபாணி ஐயர் என்ற பிராமணரை என்றும் நாம் நினையவேண்டியவர்கள் ஆகிவிட்டோம். கொடூரம் நடந்த இக்கட்டமான சந்தர்ப்பத்திலும் மனந்தளராது இடிக்கப்பட்ட ஆலயங்களிற் கிடைத்த விக்கிரகங்களை, ஏனைப் பூஜைத் தளபாடங்களைச் சந்தித்த கிணறுகளிற் போட்டுச் சாதுரியமாக மூடி மறைத்தவர் அவர். (இந்தச் செய்தியும் யாழ்பாண வைபவ மாலையிலிருந்து பெறப்பட்டது) இப்படி மூடப்பட்ட பொருளேதுவும் இன்றுவரை கிடைத்ததாக வரலாறு இல்லை.

பத்தொன்பதாம் நூற்றாண்டில், அதாவது ஆங்கிலேயர் அரசாட்சி நடைமுறைக்கு வந்ததும் சமய வாழ்வின் இறுக்கம் தளர்வு கண்டது. அரசு அதிகாரம் ஒருபுறமும் சமயக் கோட்பாடுகள் மற்றோர் புறமாக இருந்ததால் நம்மவரிடை மறுமலர்ச்சி தளிர்க்கத் தொடங்கியது. அடக்கியாளப்பட்ட எம்மவர்கள் சிந்தனை தெளிவான வளர்ச்சிகாணத் தலைப்பட்டது. நகுலேசுவரருடன் தொடர்புகொண்டோர் அனைவரும் உசாராயினர். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமானின் ஊக்குவிப்பு வேகங்கொள்ள வைத்தது. போர்த்துக்கேயரால் அழித்தொழிக்கப்பட்ட சிவன்கோவிலை மீண்டும் புனருத்தாரணஞ் செய்ய வேண்டுமென்று 1878 வைகாசி 24ஆம் நாள் கீரிமலைச் சிவன்கோவில் என்னுந் தலைப்புடன் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களால் ஒரு துண்டுப் பிரசுரம் வெளியிடப்பட்டதெனப் பேராசிரியர் தனஞ்செயராஜசிங்கம் அவர்கள் வெளிப்படுத்தியுள்ளார்கள். நாவலர் பெருமான் வெளியிட்ட அந்தப் பிரசுரம் அன்று மட்டுந்தான் வேண்டியதொன்றன்று. இன்றைய ஆலய நிலையைப் பார்ப்பவர்கள் அந்த, நாவலர் பெருமான் விக்ஞாபனம் இன்றும் வேண்டியதுதான் என்று தயங்காது கூறுவர்.

முன்னைநாள் ஆதீன முதல்வர், இன்றைய ஆதீன முதல்வர் சிவஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்கள் அவர்கள் தந்தை குமாரசுவாமிக் குருக்கள் அவர்கள் தந்தை தியாகராசாக் குருக்கள் 1882 சித்திரபானு ஐப்பசியில் வெளியிட்டுள்ள கீரிமலைச் சிவன்கோவில் பற்றிய ஒரு பிரகடனத்தில் நாவலர் பெருமானின் முயற்சியையும் சுட்டிக்காட்டியுள்ளார். 1895 மன்மத வருடம் ஆனி மாதத்திற் கும்பாபிஷேகம் ஒன்று நடைபெற்றிருக்கிறது. 1918இல் எதிர்பாராத விதமாக ஆலயம் தீப்பற்றி எரிந்திருக்கிறது. கொடித்தம்பம், பழமைவாய்ந்த வாகனங்கள் எல்லாம் எரிந்து சாம்பராயின. திருப்பணி வேலைகள் தொடர்ந்தன. 1953இல் மீண்டும் கும்பாபிஷேகம் நடைபெற்றது. இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட சிவாகம விற்பன்னர்கள் ஆகிய சிவாச்சாரியர்கள் இதனை நடத்தினர். 1954 முதல் வருடாந்த மகோற்சவம் சிறப்பாக நடைபெற்றிருகிறது.

ஆலய அமைப்பில் இராசகோபுரம் வேண்டப்படுவ-தொன்று. கோபுர தரிசனம் கோடிபுண்ணியம் என்று சாதாரணமாகவே சொல்லுவார்கள். அதனாற் கோபுரத்தை அமைத்துவிட வேண்டுமென்ற வேகம் குருக்கள் மனதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைகொண்டிருந்தது. கோபுரம் அமைப்பதற்கான ஆரம்ப முயற்சிகள் ஆரம்பமாயின. நிர்மாண அத்திவாரம் முன்பு கோபுர அடியமைப்பு என்று ஆக்கப்பட்டிருந்த இடத்திற்கு இருபத்தைந்து மீற்றர் வரை முன்னாக 1982இல் இடப்பட்டுப் பதினாறடி உயரம் வரை வளர்ந்தது. உள்நாட்டுப் போர்ச் சூழல் அந்தவளர்ச்சிக்கும் தடைபோட்டுவிட்டது.

புராதன மரபுகளுடன் தொடர்புடையவாகி வளர்ச்சி பெற்றுக்கொண்டிருக்கும் இந்த ஆலயம் கர்ப்பக்கிருகம், அர்த்த மண்டபம், நிருத்த மண்டபம் மகா மண்டபம் தம்ப மண்டபம், வசந்த மண்டபம், கோபுர வாயில் முன்னே நீண்டதொரு மண்டபம் என்னும் அமைவுகளுடன் கூடிய சுற்றுப்பிரகாரத்தில் பரிவார மூர்த்திகளான விநாயகர், சோமாஸ்கந்தர், மகாவிஷ்ணு, மகாலட்சுமி பஞ்சலிங்கங்கள், சண்முகர், சனிபகவான் என்போருக்கான கோயில் அமைப்புடன் பிரதிட்டை செய்யப் பெற்றுளது. கர்ப்பக்கிருகத்தைச் சுற்றிவரத் தெற்கே தட்சணாமூர்த்தி மேற்கே லிங்கோற்பவர் கோமுகைக்குப் பக்கத்தே சண்டேசுரர் உளர். வசந்த மண்டபத்தில் சிவகாமியம்மையுடன் நடராசர், மாணிக்கவாசகர், பதஞ்சலி, வியாக்கிரபாதர் என்போருந் தனித்தனி அமைக்கப்பட்டிருந்தனர். கிழக்கே யாகசாலை, நவக்கிரகம் வயிரவர் என்னும் அமைப்புடன் இரண்டாவது பிரகாரத்தில் வடக்கு நோக்கித் துர்க்கை அம்பாளும் இருக்கின்றனர்.

சிவாகம விதிக்கமைவாகச் சிற்ப சாஸ்திர ஒழுங்குகளுடன் எல்லா வேலைகளும் நடைபெற்றுள்ளன. கோயிலின் தளம் வெள்ளைக் கல்லால் நிறைவாகியது. தூண்களும் வெள்ளைக் கற்களினால் ஆக்கம் பெற்றுள்ளன. விமானத்தளங்களும் அவ்வண்ணமே நிறைவாகியவை. ஆயின் அவை சிற்ப வேலைப்பாடுகளுடனானவை. எம் பெருமான் திருவுருவங்களாகிய தக்ஷிணாமூர்த்தி, லிங்கோற்பவர் வடிவங்கள் அற்புதமான அமைவுகள். தெற்குப் பிரகாரச் சுவர்களில் எம்பெருமான் திருவிளையாடல்கள்

 8542 c c

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரிக்கப்பட்டுள்ளன. மண்டப வாயிலில் திருக்கல்யாணப் படமும் உள்மண்டபத்தின் தெற்கு வீதிச் சுவரில் மேற்கு நோக்கிய நிலையில் திருப்பாற்கடல் கடைந்த காட்சியும், வடக்கு நோக்கிய நிலையில் பகீரதன் தவம், மார்க்கண்டேயர் சிவபூசை, மன்மத தகனம், சம்பந்தர் பொற்றாளம் பெற்றமை, பிச்சாடண மூர்த்தி முதலாய தெய்வீகக் காட்சிகளையும் சித்திரங்களாகப் பார்க்கமுடியும்.

சிவாகம விதிகளுக்கு அமைவாக நித்திய நைமித்திய விழாக்கள் இங்கு நடைபெறுகின்றன. திருவனந்தல் முதலாக அர்த்த யாமப் பூசை ஈறாக நாளாந்தம் ஆறு காலப் பூசை நித்திய பூசையாக இடம்பெறுவதுண்டு. நைமித்திய விழாக்களாகச் சித்திரை வருடப்பிறப்பு சித்திராப் பூரணை, வைகாசி விசாகம், ஆனி உத்தரம், ஆவணி மூலம், சிவராத்திரி, மாநோன்பு, புரட்டாதிச் சனி, ஐப்பசி வெள்ளி, திருக்கார்த்திகை, திருவாதிரை, சொர்க்கவாயில் ஏகாதசி, தைப்பொங்கல், தைப்பூசம், மாசிமகம், சிவராத்திரி, பங்குனி உத்தரம் போன்ற சிறப்புறு தினங்கள் விசேட திருவிழாக்-களாக நடைபெறுகின்றன. சோமவாரமும் சிறப்புற நடைபெறுவது. சிவராத்திரியின் நிறைவு தீர்த்தோற்சவமாக நடைபெறக்கூடிய வகை பதினைந்து திருவிழாக்களைக் கொண்டமையக் கூடிய வகை கொடியேற்றத்துடன் மஹோற்சவம் நடைபெறும். அம்பாளுக்கான மஹோற்சவம் சித்திரை வருடத்தன்று தேருலா வரக்கூடிய வகை பன்னிரண்டு திருவிழாக்களுக்கு ஏற்றபடி பங்குனியிற் கொடியேறி உற்சவம் தொடரும்.

புராண படன மரபு இங்கு நல்ல முறையிற் பேணப்பட்டு வருகிறது. பெரியபுராணம், திருவாதவூரடிகள் புராணம், கந்த புராணம், திருவிளையாடற் புராணம், ஏகாதசிப்புராணம் என்பன உரிய உரிய காலத்திற் படிப்பிற்குரியனவாகின்றன. புராண படனத்தைச் சிவாசாரியர்கள் தொடக்கிவைக்க ஆசார சீலர்களாய்ப் பங்கு கொள்ள வந்தோர் தொடர்வர். பண்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாள்களில் ஏரம்பையர், குமாரசுவாமிப் புலவர், அப்பாசாமி ஐயர், வித்துவ சிரோமணி பொன்னம்பலபிள்ளை த. கைலாயபிள்ளை போன்ற அறிஞர்கள் இந்தப் பெரும்பணியில் ஈடுபட்டுள்ளனர்.

நகுலேஸ்வரர் மீது பக்தி கொண்ட செம்மனச் செல்வர்கள் பாடிய பக்திப் பிரபந்தங்கள் தனிப்பாடல்கள் பற்றிய விபரம் மற்றோரிடத்துண்டு.

நகுலேஸ்வரரையே தன் வாழ்முதலாக நினைந்து போற்றி, அவர் திருப்பணிகளே செய்யப்பட வேண்டியவை என்று, நாளும் பொழுதும் அவரை நீங்கா நினைவிற் கொண்டவராகி வாழ்ந்துவருகின்ற ராஜராஜஸ்ரீ கு. நகுலேஸ்வரக்குருக்கள் அவர்களின் நிர்வாகத்தில் ஆலயம் வளர்ச்சி கண்டு கொண்டிருந்த வேளை 1990 ஒக்ரோபர் பதினாறாம் திகதியும் பதினெட்டாந் திகதியும் சூழலின் யுத்த நிலை காரணமாக ஆலயம் பாரிய சேதத்திற்குள்ளாகியது. கேதாரகௌரி நோன்பு காலம். ஆலயத்தில் உற்சவம் நடந்துகொண்டிருந்தது. மக்கள் கூட்டமுங் கணிப்பிற்குரியதாக இருந்தவேளை கூரையைத் துழைத்த குண்டு உள்ளே பாய்ந்தது. அடியவர் சிலருங் காயப்பட்டதுண்டு. அன்றே குருக்களும் அவரைச் சார்ந்தோரும் அந்தச் சூழலை விட்டு வெளியேறினர். சுமார் ஏழு ஆண்டுகளுக்கு மேலாகக் கீரிமலைக்கு யாருஞ் செல்லமுடியாதிருந்தது. சுமார் ஏழு ஆண்டுகளின் பின் குருக்களைப் பாதுகாப்புப் பகுதியினர் அழைத்துச் சென்று காட்டினர். அந்த வேளை குருக்கள் மிகக் கஷ்டப்பட்டுத் தம்மைச் சமாளித்துக் கொண்டாரென்று தெரிகிறது. ஆலயம் ஆலயமாக இருக்கவில்லை. கர்ப்பக்கிருகம் தவிர்ந்த ஏனைய இடங்களெல்லாம் சின்னாபின்னமாகியிருந்தனவென்றும் உள்ளும் புறமும் பற்றைக் காடாகக் காணப்பட்டதென்றும் கோவிலுள் இருந்த மாங்கல்ய லட்சுமி, மகாலட்சுமி, விநாயகர், உற்சவமூர்த்தி-கள், ஆறுமுகசுவாமி, நவக்கிரகங்கள், தீபங்கள், பூசைக்குரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
202210

உபகரணங்கள் அனைத்தும் காணமற் போய்விட்டனவென்றும் வாகனங்கள் எதுவுமே இல்லாத நிலை ஏற்பட்டுள்ளதென்றும் இறைவன் உலாவரும் பஞ்சரதங்களும் புதிதாகக் கண்டு-கொள்ளப்பட வேண்டிய நிலை என்றும் குருக்களின் செவ்வி தெரியவைக்கின்றது.

குருக்களின் இடையீடு படாத முயற்சியால் புனரமைப்பு வேலைகள் தொடருகின்றன. அரசாங்க உதவியுடனும் பொதுமக்களின் ஊக்குவிப்புடனும் புலம்பெயர்ந்த நகுலேசுவரர் அடியார்களது உற்சாகத்துடனும் வேலைகள் தொடருகின்றன. தேவையான விக்கிரகங்கள் இந்தியாவில் உருவாகிக் கொண்டிருக்கின்றன. குருக்களின் மேற்பார்வை அங்கும் சென்று கொண்டுதானிருக்கிறது.

சுற்றுப் பிரகார மண்டபங்கள் அற்புதமான வேலைப்பாடு-களுடன் வளருகின்றன. வேலை வனப்பைப் பார்க்கும் போது உடைந்தது நல்லதுதான் என்று ஒருகணம் நினைக்கத் தோன்றுகிறது. குருக்களின் செவ்வி கொண்டு பார்க்கும் போது அவர் சிந்தனை செயல் முழுவதும் சிவம் நிறைந்திருப்பது தெரிகிறது. அல்லாமலும் இந்த ஆலயம் மூன்றாவது முறையாகப் புனரமைப்புச் செய்யப்படுகின்ற-தென்பதாகவும் தெரிந்துகொள்ள முடிகின்றது.

ஆரம்ப காலத்தில் நகுலேஸ்வரர் ஆலயம் கடற்கரையிலுள்ள மலைமீதிருந்ததென்றும், கடல்கோள் ஒன்று காரணமாக அது கடலுள் அமிழ்ந்துவிட்டதென்றும் பின்னர் நிர்மாணிக்கப்பட்ட ஆலயம் போர்த்துக்கேயரால் தரைமட்டமாக்கப்பட்டதென்றும், மூன்றாவதாக எழுந்த ஆலயம் ஈழப் போரால் அழிவுற்றதென்றும், அதுவே இப்போது புணர்நிர்மாணம் பெறுகின்றதென்றும் குருக்கள் சொல்லிய கருத்துக்களை நகுலேஸ்வர குரு பவள விழா மலர் என்னும் வெளியீட்டில் நகுலேஸ்வரம் - புதுப்பொலிவு என்னும் குருக்களுடனான செவ்வி உரையிற் பார்க்க முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீரிமலையின் மலைப்பிரதேசம் கடற்கரை ஓரமாகக் கிழக்கிலிருந்து மேற்குவரை நீண்டிருந்திருக்கிறது. அப்படி இருந்ததற்கான அதிகுறிகளைக் கடலிலே இன்றும் பார்க்க முடிகின்றது. கடலால் விழுங்கப்பட்ட அம்மலைப்பகுதியின் அடித்தளக் கற்பாறைகள் அங்கு இன்றும் தொடராக இருந்துகொண்டுதானிருக்கின்றன. திருத்தம்பலேசுவரம் என்று அன்று அழைக்கப்பட்ட கீரிமலையின் சிவனாலயம் இந்த மலையிலேதான் இருந்திருக்கிறது. நகுலமுனிவரால் வழிபாட்டிற்குரியதாகப் பயன்படுத்தப்பட்ட ஆலயமும் இதுவே. இதற்கு அருகாமையில் உச்சிமலைப்பிள்ளையார் ஆலயம் என ஒரு விநாயகர் கோவிலும் இருந்திருக்கிறது. எல்லாமே கடலின் பெரும்பசிக்கு இரையாகிவிட்டன. இப்போது அங்கு காணப்படும் சடையம்மா சமாதிக்கு அண்மையாக ஒரு சிவலிங்கம் காணப்படுகிறது. இந்தச் சிவலிங்கத்திற்கும் முன்னைய ஆலயத்திற்கும் தொடர்பிருக்கலாம் என்று எண்ண இடமுண்டு.

## தலத்தொன்மை மகிமை பற்றிய வரலாற்றுச் செய்திகள்

திரேதாயுகத்திலே பரமேஸ்வர மூர்த்தி பார்வதிதேவி-யுடனே இம்மலைச்சாரலில் எழுந்தருளி இருந்த பொழுது பார்வதிதேவி நீராடுவதற்காகக் கண்டகி தீர்த்தத்தை அப்பரமேஸ்வர மூர்த்தி இவ்விடத்தில் அழைத்துவைத்தார். அத்தீர்த்தத்திலே தேவர்களும் இருடிகளும் பிறரும் வந்து தீர்த்தமாடிப் புண்ணியவான்களாய்ப் போனதால் அம் முதலாம் உகத்திலே இந்நாடு புண்ணியபுரம் எனப் பெயர் பெற்றது. இக்காலத்திலே முசுகுந்தச் சக்கரவர்த்தி இவ்விடம் வந்தபொழுது தானும் அவருடன் கூடி வந்து இம்மலைச் சாரலிலுள்ள கண்டகி தீர்த்தத்தில் ஆடிச் சிவாலய தரிசனமுஞ் செய்து வருகையில் தமக்கிருந்த கீரிமுகம் மாறிச் சுபாவமுகங் கிடைத்தது என்றும் அதுமுதல் அம்மலை நகுலகிரியென்றும் அங்குள்ள ஈஸ்வரனை நகுலேஸ்வரனென்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றும் ஈஸ்வரியை நகுலாம்பிகை என்றும் பெயரிட்டழைத்ததாக நகுலமுனிவர் கூறுவர்.

அக்காலம் முருகமூர்த்தி சூரனைச் சங்கரித்துக் கதிரமலைக்குச் செல்லுகையில் நகுல மலைச் சாரலில் வந்திறங்கி நகுலேசர் கோயிலினயலிலே தமக்குமோர் ஆலயஞ் சமைப்பித்துச் சிலநாள் அங்கு தங்கியிருந்தார். கலியுகத்திலே அக்கோயிலுக்குக் கதிரையாண்டவர் கோயிலென்னும் பெயர் விஜயராசனாற் சூட்டப்பட்டது. கந்தசாமியார் வந்திறங்கிய துறை காங்கேசன்துறை என்றழைக்கப்பட்டது. கசாத்துறை என்றும் அது குறிப்பிடப்படுவதுண்டு.

இரண்டாம் உகத்திலே இராவணன் தானொருவனேயன்றி வேறொருவரும் இராவண வீணையைத் தொடவும்படாதென்று உறுதியான கட்டளை பண்ணியிருந்த பொழுது சித்திராங்கதன் என்னுமொரு கந்தருவன் தானும் அந்த வீணையை வாசிக்க நெடுங்காலம் பேராசை கொண்டிருந்தா-னென்றும் தசரத இராமனால் அந்த இராவணனுடைய இருபது கைகளும் அறுந்து விழுந்த சமயத்திலே அவ்வீணையைக் கவர்ந்து கீரிமலைக்கு வந்து அதனைப் பிரபல்யப்படுத்தினான் என்றும் அதனால் அந்த இடம் காந்தருவ நகர் என்றும் வீணாகானபுரம் என்றும் வழங்கப்பட்டதென்றும் சொல்லப்படுகிறது.

மூன்றாவது யுகத்திலே நிடத நாட்டை ஆட்சி புரிந்த நளனென்னுஞ் சூரிய குலத்தரசன் சூதாடி அரசிழந்து வனவாசஞ் செய்தபோது கலியினால் தனக்கு வந்த துன்பத்தை நீக்கவேண்டுமென்ற பெருவிருப்புடன் இலங்கை-யிலுள்ள கோணேசர் திருப்பதிக்கு வந்தான். அங்கிருந்த ஒரு பெரியவர், அவனைக் கீரிமலைக்குச் செல்லும்படியும் அங்குள்ள கண்டகி தீர்த்தத்திலாடி நகுலேஸ்வரரை நாளுந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழுதால் கலியைத் தொலைக்கலாம் என்றும் கீரிமலைக்கு வழிப்படுத்தினார். அதனைக் கேட்ட நளன் கீரிமலை சென்று கண்டகியிலாடி நகுலேஸ்வரரை வழிபாட்டான். அப்பொழுது இறைவன் பிரசன்னமாகி 'நீ வேண்டிக்கொண்டபடி அருளினோம் சென்று வருக' என்றனன். இறைவன் தன் கையிலிருந்து அக்கினியையும் தாம் அணிந்திருந்த சர்ப்பத்தையும் நோக்கி நளச் சக்கரவர்த்தியைத் சந்தித்து அவனைப் பிடித்துள்ள கலியை நீக்கி வரும்படி பணிக்கின்றான்.

அப்படியே நளச் சக்கரவர்த்தி சென்று கொண்டிருக்கும் வழிக்கெதிரே அந்த அங்கினி சுவாலையாகி எரிய அந்த வேளை அந்தப் பாம்பு துடிக்க சக்கரவர்த்தி பரிதாபப்பட்டு அதனைத் தூக்கிச் சுவாலைக்கு வெளியே விட்டான். அந்தச் சர்ப்பம் சினந்து பாய்ந்து அவனைக் கடித்தது. அப்பொழுது அவன் தேகம் முழுவதும் குட்டம் பிடித்து அவனழகைக் கெடுத்தது. அந்தவேளை நளச்சக்கரவர்த்தி 'நான் செய்த நன்மைக்கு எனக்குக் கிடைத்த கைமாறு இதுதானா? சர்ப்பம் தன் சுயகுணத்தைக் காட்டிவிட்டதே: என்ன செய்யலாம்?' என்று எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி வருந்தினான். அப்பொழுது அந்தப் பாம்பு ஒரு பிராமணனாகி நின்று 'சக்கரவர்த்தியே! பயப்பட வேண்டாம்:, யான் நகுலேசர் சர்ப்பாபரணம். அந்த நகுலேசர் உன் வழிபாடு கண்டு இரங்கி உன்னை வருத்தும் கலியிடரை நீக்கி வருமாறு எனக்கும் அக்கினிக்கும் பணிப்பு வழங்கினார். அதனாலே தான் நாம் இப்படி நடந்துகொண்டோம். ஒரு சில காலம் யாருக்குந் தெரியாது நீ மறைந்து வாழவேண்டிய தேவை இருக்கிறது. அதற்காக உனக்கு வேற்றுரு உண்டாக்கவே இப்படி நடந்தோம் இந்த வேற்றுருவை மாற்றிச் சுய உருவைக் கொள்ளவேண்டுமென்று நீ நினையும் போது உன் சொந்த உருவை நீ பெற்றுவிடுவாய்: என்று சொல்லி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனை அவை அனுப்பிவிட்டு நகுலேஸ்வரர் முன் வந்தன.

இது நடந்து முடிந்த சில காலத்தின்பின் தரும புத்திரரின் தம்பியாகிய அருச்சுனன் தீர்த்த யாத்திரை செய்து கொண்டு தென்புறமாக வந்துகொண்டிருந்த வேளை கீரிமலையை வந்தடைந்தான். அங்கே கண்டகி தீர்த்தத்தில் ஆடி நகுலேஸ்வரர் ஆலயஞ் சென்று வழிபட்டான். அப்பொழுது நகுலேசுவரர் நகுலாம்பிகை உடனாகி வெளிப்பட்டு அவனுக்கு வேண்டிய வரங்களும் கொடுத்தார்.

நான்காவது உகமான இந்தக் கலியுகத்திலே அநேக தவத்திருவாளர்களும் பெரியவர்களும் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் முச்சிறப்பும் பொருந்திய இடமாக இருப்பது நோக்கி இவ்விடத்திற்குத் தீர்த்த யாத்திரையாக வருகின்றார்கள். இதனை மணற்றிடர் என்றும் கீரிமலையென்றுஞ் சொல்வார்கள். 'இஃதொரு மகா புண்ணிய தலமாகும். நீயும் இத் தீர்த்தத்திலாடிச் சிவாலய வணக்கமும் செய்தால் உனக்குள்ள நோய் மாறும். சுபாவ முகமும் கிடைக்கும் என்று நகுல முனிவர் மாருதப்பிரவல்லியை நோக்கிச் சொன்னார். அக்கருத்திற்கமைய நடந்து அவள் சுபாவ முகம் பெற்றமையும் தெரிந்ததே.

விஜயன் இலங்கைக்கு வந்து ஆட்சியைத் தமதாக்கிக் கொண்டு ஆட்சி பீடத்தேறு முன்னமே தமது ஆட்சிக்குப் பாதுகாப்பாக நான்கு திசையிலும் நான்கு சிவாலயங்களை, அமைத்தானென்றும் வடக்கில் திருத்தம்பலேசுவரர் திருத்தம்பலேசுவரி கதிரையாண்டவர் கோயிலையுங் கட்டுவித்தானென்றுங் கருத்துக்கள் உண்டு. திருத்தம்பலேசுவரர் நகுலேசுவரர், திருத்தம்பலேசுவரி நகுலாம்பிகை என்று பின்னர் பெயர் மாறின. எனவே விஜயன் காலத்தில் இறைவனுக்கும் அன்னைக்கும் புறம்பு புறம்பாகக் கோயில்கள் இருந்திருக்கின்றன என்று தெரிகிறது. விஜயன் நகுலேசுவரருக்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத்தைப் புதிதாகக் கட்டுவித்தானென்ற கருத்துச் சில இடங்களிற் பதிவாகியுள்ளது. அவன் காலத்திற்கு முன்பாகவே அமைவு பெற்ற ஆலயம் விஜயன் காலத்திற் புதுப் பொலிவுபெற்றது என்பதுதான் பொருத்தமானது.

'கீழ்த் திசைக்குத் தம்பலகாமத்துக் கோணேசர் கோவிலை நிறுவி (புதுப்பித்து)த் தென்றிசைக்கு மாத்தறையிற் சக்திரசெகரேச்சுரன் கோவிலை எழுப்பி வடதிசைக்குக் கீரிமலைச் சாரலில் திருத்தம்பலை என்னும் பதியிலே திருத்தம்பலேசுவரன், திருத்தம்பலேசுவரி கோவில்களையும் அவைகளின் சமீபத்தில் கதிரையாண்டவர் கோவிலையுங் கட்டுவித்து (புதுப்பித்து) அவ்வாலயங்களுக்குப் பூசனை நடத்தும்படி நீலகண்டாசாரியன் மூன்றாங் குமரன் வாமதேவாசிரியன் என்னுங் காசியிற் பிராமணனையும் அவன் பன்னியாகிய விசாலாட்சியம்பாளையும் அழைப்பித்து அக்கிரகாரம் முதலிய வசதிகளையும் கொடுத்து இருத்தி வைத்தான்' என்பனவாய கருத்துக்களை மாதகல் மயில்வாகனப் புலவர் எழுதிய யாழ்ப்பாண வைபவமாலை குறிப்பிடுகின்றது. சிங்கள இனத்தவரான Dr. போல், E. பீரிஸ் என்ற வரலாற்றாசிரியர்கள், விஜயன் இலங்கைக்கு வந்த கி.மு. ஐந்தாம் நூற்றாண்டு காலகட்டத்திற் பழுதடைந்திருந்த பல சிவாலயங்களைப் புதுப்பித்தான் என்றும், இலங்கையில் மிகப் பழமை வாய்ந்த சிவ வழிபாட்டுத் தலங்கள் ஐந்தனுள் நகுலேஸ்வரம் ஒன்று என்றும் இலங்கையைப் பொறுத்தவரை அது தொன்மையான இரண்டாவது தலமென்றும் குறிப்பிட்டுள்ளார்கள்.

பண்டை நாளில் நகுலமுனிவர் என்னும் பெயருடைய ஒரு தபோதனர் அங்குள்ள மலைச்சாரலிலே காலங் கழித்துள்ளார். அந்த வேளை அங்கிருந்த நன்னீரிற் தீர்த்தமாடிச் சிவ வழிபாடு செய்து வந்தார். சிலநாள்களில் அவர் கீரிமுகம் மாறியமை கண்டு வியப்புற்று அந்த இடந்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது தொடர்ந்த வாழ்விற்குப் பொருத்தமானதெனத் தேர்ந்து அங்கிருந்த மலைக் குகையிலே வாழ்ந்துகொண்டிருந்தார். அம்முனிவனது கீரிமுகம் மாறுவதற்கு இடமாயிருந்த தலம் என்ற காரணத்தால் அப்பதி கீரிமலை என்றாயது. விஜயராசன் அங்கிருந்த சிவனுக்கு ஆலயங் கட்டுவித்தான். நகுல முனிவர் அங்கு தங்கியிருந்து வழிபாடு செய்து வந்த காரணத்தால் முன்னர் திருத்தம்பலேசுவரர் கோவில் என்றழைக்கப்பட்ட ஆலயத்தை நகுலேசுவரர் ஆலயமென்றும் திருத்தம்பலேசுவரியம்மன் கோயில் என்றழைக்கப்பட்ட ஆலயம் நகுலாம்பிகையம்மன் ஆலயமென்றும் பெயர் பெறுவன ஆயின. இந்த விபரமும் யாழ்ப்பாண வைபவ மாலையில் விரிவாக உண்டு.

அந்த நாள்களில் கண்டி என்னும் நாட்டிலிருந்து (அநுரதபுரத்திலிருந்து என்றுஞ் சொல்வர்) இலங்கையை ஆட்சிசெய்த பாண்டு மகாராசன் (கி.பி. 491) மணற்றிடர் என்றழைக்கப்பட்ட இந்த வடபகுதிக்கு வந்திருந்தான். இந்தப் பகுதியிற் குடியிருந்த சிங்களவர் சிலர் கீரிமலைப் பகுதியைச் சேர்ந்த கரைப்பகுதிகளில் இருந்த முக்குகர் என்னும் மீன்பிடிப்பவர்களைக் கொண்டு மீன் பிடிப்பித்து வெயிலிற் காயச் செய்து கண்டி முதலிய இடங்களுக்குக் கொண்டு-போய் வியாபாரஞ் செய்தனர்.

உசுமான் சேந்தன் முதலிய முக்குகத் தலைவர்கள் வேலையாட்களை வைத்து மீன் பிடித்துக் கொண்டுவந்தனர். சிங்களவர் நிழல் வசதி நீர் வசதி என்பவற்றைக் கருத்திற்கொண்டு கோவிற் பிரகாரங்களில் மீனைக் காயப்போட்டனர். கோவிற் கிணறுகளில் தண்ணீர் அள்ளவுந் தொடங்கினர். அதனால் அங்கிருந்த பிராமணர்கள் கோவிலைப் பூட்டிக்கொண்டு ஒதுங்கிவிட்டனர். சிலகாலம் கோவில்களிற் பூசை எதுவும் நடக்கவில்லை. செய்தியறிந்த பாண்டு மகாராஜன் கீரிமலைச் சாரலுக்கு வந்து விசாரணை செய்து நியாயமான தண்டனை வழங்கி முக்குகக் குடிகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கிருந்து அப்புறப்படுத்திவிட்டான். உசுமான் முதலிய முக்குகத் தலைவர்கள் மட்டக்களப்பிற்குச் சென்றனர். சிலர் இங்கேயே மறுதுறைகளைச் சார்ந்திருந்தனர். அது முதல் உசுமான்துறை. சேந்தன்களம், வலித்தூண்டல் என்னுந் துறைகளில் முக்குகர் இருந்ததில்லை. இவையும் யாழ்ப்பாண வைபவமாலை தருஞ் செய்திகளே.

**உக்கிரசிங்கன்:**

விஜயராஜனின் மரபில் தோன்றியவன் உக்கிரசிங்கன் கி.பி. 795 காலகட்டத்தைச் சேர்ந்தவனாகலாம். வடக்கிலிருந்து பெருஞ் சேனைகளைக் கொண்டுவந்து போராடி இலங்கை அரசாட்சியில் அரைவாசி வரைக்கும் பிடித்து கதிரை மலையிலிருந்து ஆண்டு வந்தவன். தென்பகுதியை வேறொருவன் ஆண்டான். இவன் சிங்க முகத்தையும் மானிட தேகத்தையும், உடையவன். நகுலேஸ்வரரைத் தரிசிக்க விரும்பிய இவன் கீரிமலைச் சாரலில் வந்திறங்கிச் சோழமன்னர்கள் முன்பு வந்திறங்கியிருந்த வளவர்கோன் பள்ளம் என்னும் இடத்திற் பாளையமிட்டிருந்தான்.

அவன் அவ்விடம் வந்திருப்பதையும் கரணவாய் வெள்ளைப்பாவை முதலிய இடங்களில் நல்லுப்புப் படுஞ் செய்தியையும் தொண்டைநாட்டை அரசாண்ட தொண்டைமான் என்னும் அரசன் கேள்விப்பட்டுப் பரிவாரங்களுடன் கீரிமலைச் சாரலுக்கு வந்திறங்கி உக்கிரசிங்கனுடன் தொடர்புகொண்டு அந்நாட்டில் விளையும் உப்பில் தனக்கு வேண்டிய அளவை வருடந் தோறும் பெற்றுக்கொள்ளவும் உப்புப் படுமிடத்திற்கு அண்மையாக மரக்கலங்களைக் கொண்டு சென்று உப்பேற்ற வசதியாக வடகடலில் ஒரு ஆறு வெட்டுவித்துக் கொள்ளவும் அங்கீகாரம் பெற்றான். உத்தரவைப் பெற்று மரக்கலங்கள் செல்லக்கூடிய சிற்றாற்றை வெட்டுவித்துத் தன்னூருக்கு மீண்டான். அன்றுமுதல் அந்த ஆறு தொண்டைமானாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று அழைக்கப்படுகிறது.

சோழ தேசாதிபதி திசையுக்கிரசோழன். அவன் மகள் மாருதப்பிரவல்லி. அவள் குன்ம நோயினாற் பாதிப்புற்றவள். அதைமாற்ற எவ்வளவோ வைத்தியஞ் செய்தும் முடியவில்லை. தீர்த்த யாத்திரை புறப்பட்டாள். காவிரிப் பூம்பட்டினத்திலிருந்து புறப்பட்டவள் சாந்தலிங்கம் என்னும் சந்நியாசியைச் சந்திக்கின்றாள். நின் நோய் குணமாவதற்கு நீ எடுத்த முயற்சியே பொருத்தமானது. இலங்கையின் வடக்குப் பக்கலில் கீரிமலை என்றோர் மலையுண்டு. அது சமுத்திர தீரத்திலுள்ளது. அங்கே உவர்நீர்ச் சலத்துள்ளே சுத்த நீரும் மலையருவியும் கலக்கும் ஒரு மிகப் புனிதமான தீர்த்தமுண்டு. அது உலகிலுள்ள தீர்த்தங்கள் எல்லாவற்றினும் உயர்வானது. அங்கே சென்று நீராடிச் சிலகாலம் அங்கு நீ தங்கியிருந்தால் உன் நோய் மாறும் என்று சொன்னார். அவர் பணிப்பின்படி மாருதப்பிரவல்லி புறப்பட்டுத் தோழியருடனாகக் கீரிமலைச் சாரலில் வந்திறங்கி குமாரத்தி பள்ளம் என்னும் இடத்திற் பாளயம் போட்டுத் தங்கினாள். நகுல முனிவரைத் தரிசித்தனர். அவரை வணங்கி ஆசீர்வாதம் பெற்று அத்தல விசேடத்தையும் தீர்த்த மகிமையையுங் கேட்டறிந்தனர். அத்தீர்த்தத்தில் ஆடிச் சிவனை வழிபட்டமையால் தமது கீரிமுகம் மாறிய செய்தியையும் முனிவர் குறிப்பிட்டார். எல்லாவற்றையுங் கேட்டு மகிழ்ந்த மாருதப்பிரவல்லி தானும் ஒவ்வொரு நாளுந் தீர்த்தமாடிச் சிவனை வழிபட்டுவந்தாள். சில நாள்களில் அவள் குன்ம நோயும் பறந்தது. அவளுக்கிருந்த குதிரை முகமும் மாறிச் சுபாவமுகமும் வந்தது. நோய்கள் திருப்தியாக மாறவே அவள் யௌவன ரூபத்தை எல்லோரும் பார்க்க முடிந்தது என்னும் வரலாறுகளையுங் கூட மாதகல் மயில்வாகனப் புலவரின் யாழ்ப்பாண வைபவமாலை என்னும் நூலிற் பார்க்கமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### காசி விஸ்வநாதர் ஆலயம்:

கீரிமலைச் சிறாப்பர் மடத்திற்கு முன்னாலுள்ள சந்தியில் சேந்தாங்களம் நோக்கிச் செல்லும் வீதிக்கும் கேணி நோக்கிச் செல்லும் வீதிக்குமிடையே இருப்பது இந்த ஆலயம். காசியிலிருந்து கொண்டுவரப்பட்ட சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள ஆலயம், அதனால் காசி விஸ்வநாதர் ஆலயம் என அழைக்கப்பட்டது. மக்கள் கூட்டம் இங்கு வழிபாட்டிற்குச் செல்வது குறைவுபட்டுள்ளது. காரணம் தெரியவில்லை. இது மாவை ஆதீன நிர்வாகத்தின்கீழ் உள்ளதோர் கோயில்.

### கேணிக்கரைப் பிள்ளையார் ஆலயம்:

கீரிமலைக் கேணிக்கு அணித்தாக, கேணியின் தென் கிழக்கில் சிறியதோர் ஆலயமாகக் கேணி நோக்கி வருந் தெருவோரமாக தெருவின் மேற்கில் அமைந்தது இந்த ஆலயம். இப்போது ஓரளவு பெரிதாக நிர்மாணம் பெறுகின்றது. வீரசைவர்களின் நிர்வாகத்தில் இயங்குவது.

### மாரியம்மன் ஆலயம்:

கீரிமலைச் சந்தியிலிருந்து காங்கேசன்துறை நோக்கிச் செல்லும் வீதியில் சந்தியிலிருந்து இருபத்தைந்து மீற்றர் தொலைவில் தெருவின் வடக்கிலுள்ள உபதபாலகத்திற்கு மேற்கெல்லையில் வடக்கு நோக்கிச் செல்லும் ஒழுங்கையின் முடிவிடத்துள்ளது. மகோற்சவம் நடைபெறும் இந்தக் கோவிலில் சிறிய தேர் வாகனங்கள் இரண்டு போர்க்கால சூழ்நிலைக்கு முன் இருந்ததுண்டு. வீரசைவர்களின் முகாமைத்துவத்தில் நடைபெறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கோவில் மகோற்சவம் மாசி மகத்தைத் தீர்த்தோற்சவமாகக் கொண்டு நிறைவுறும். முகாமையாளர்கள் மரபிற் சிவத்திரு ந. பரமேஸ்வரனும் சகோதரர்களும் உளர்.

**கிருஷ்ணன் கோயில்:**

கீரிமலைச் சந்தியிலிருந்து காங்கேசன்துறை நோக்கிச் செல்லும் போது வரும் ஏற்றத்தில், சந்தியிலிருந்து சுமார் ஐநூறு மீற்றர் தூரத்தில் தெருவிற்கு வடக்காக இந்தக் கோவிலுள்ளது. இந்தக் கோவில் அமைந்துள்ள இடத்தின் வடக்கேயுள்ள கடலில் சென்று கொண்டிருந்த கப்பலொன்று கடலினுள்ள ஒரு திட்டில் முட்டிக்கொண்டது. அதைச் செலுத்த எவ்வளவோ முயன்றும் முடியவில்லை. கரையிலே மாடு மேய்த்துக் கொண்டிருந்த இளைஞன் ஒருவன் கப்பலைச் செலுத்துவோர் படுந் தொல்லையை அவதானித்துவிட்டு நீந்திச் சென்று நந்தகோபனை மனத்தினால் வழுத்தி அந்தக்கப்பலை அந்தத் திட்டிலிருந்தும் விலக்கிக் கொடுத்தான். உடனே கப்பல் உரிமையாளர்கள் அந்த இளைஞனுக்குப் பெருந்தொகைப் பணங் கொடுத்தார்களென்றும் அந்தப் பணங்கொண்டு கட்டுவிக்கப்பட்டதுதான் அந்தக் கிருஷ்ணன் கோயிலென்றும் ஒரு கர்ணபரம்பரைக் கதை உண்டு. இக்கோயில் சில ஆண்டுகளின் முன் புனருத்தாரணம் செய்யப்பெற்றுக் கும்பாபிஷேகம் நடந்ததுண்டு.

**கதிரையாண்டவர் கோயில்:**

கிருஷ்ணன் கோயிலுக்குக் கிழக்கே தெருவின் வடக்காக உள்ளதொரு அரசமரத்தடியில் வடக்கு நோக்கிச் செல்லும் ஒழுங்கை மூலம் சென்றால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடற்கரையில் உள்ளது இக்கோயில். ஈழத்தின் திருச்செந்தூர் என்று போற்றப்படும் இக்கோயில் முருகன் தங்கியிருக்க வேண்டி ஏற்பட்டதொரு காரணத்தால் தாபிதமானதென்றும் விஷயன் திருத்தம் பலேசுவரர் திருத்தம்பலேசுவரி கோவில்களைத் தாபித்த வேளை இதனையும் தாபித்தானென்றும் வரலாறுகள் உண்டு. விஜயன் காலத்திற் புதுப்பிக்கப்பட்டதென்றுஞ் சொல்வர். கர்ப்பக்கிருகத்தில் வேல் உண்டு. நகுலேஸ்வர குருபரம்பரையினரால் பூசை செய்யப்படுகிறது.

**ரேணுகாச்சாரியர் ஆலயம்:**

கீரிமலைச் சந்தியிலிருந்து காங்கேசன்துறை மாவிட்டபுரம் என்னும் பதிகளை நோக்கிச் செல்லும் தெருக்களிடையே உள்ளதொரு மடத்தொகுதிக்குள் இவ்வாலயம் அமைந்துள்ளது. வீரசைவகுரு சிவத்திரு ஐயம்பிள்ளை அவர்களால் இது தாபிக்கப்பட்டது.

**நகுலகிரிப்புராணம்**

மன்னுமறை யவர்முனிவர் மகங்கள்வாழி
மௌலியணி வேந்தர்மனு நீதிவாழி
உன்னருமைந் தெழுத்துமணி நீறுவாழி
யுளங்கவினுஞ் சைவநெறி யோங்கிவாழி
நன்மையுல குயிர்தழைத்து நாளும் வாழி
நானிலமேல் முகில்மழையை நல்கிவாழி
அன்னநடை யுறுநகுலாம் பிகையும்வாழி
யடியருடன் நகுலேச வமலன் வாழி.

*மாருதப்புரவீகவல்லியாத்திரைப் படலம், இல. 51.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மடங்கள்

கீரிமலைக்கு வருகைதரும் யாத்திரிகர்கள் பலரும் வந்திருந்து தங்கள் வழிபாட்டுக் கடன்களைச் செவ்வனம் நிறைவுசெய்ய வேண்டும் என்னும் பெரு நோக்குடன் தருமவான்கள் பலர் மடங்களைக் கட்டியுள்ளனர். அந்த மடங்கள் எல்லாம் அண்மைய போர்ச் சூழ்நிலை காரணமாக அழியும் நிலைமைக்குள்ளாகிக் காணப்படுகின்றன. இன்னுஞ் சில ஆண்டுகளுள் அவை இருந்த இடமே தெரியாது போனாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. எதிர்கால வரலாற்றுணர்விற்கு ஊட்டமாக வேண்டுமே என்பதற்காக இங்கே சில தகவல்களைப் பதிவு செய்கின்றோம்.

**சிறாப்பர் மடம்:**

காங்கேசன்துறையிலிருந்தும் மாவிட்டபுரத்திலிருந்தும் கீரிமலை நோக்கி வரும் வீதிகள் ஒன்றையொன்று சந்தித்து ஒரு சிறிதளவு தென்மேற்கிலுள்ள சேந்தாங்குளம் மாதகல் நோக்கி ஒன்று செல்ல மற்றையது சிறிதளவு வடமேற்காகிக் கீரிமலைக் கேணியை நோக்கிச் செல்கிறது. குறிப்பிட்ட அந்தச் சந்திக்குத் தெற்கில் அழகிய அலங்கார வேலைப்பாடுகளுடன் காட்சி தருவதுதான் சிறாப்பர் மடம். மடத்தின் வடக்கும், கிழக்கும் பிரதான வீதிகள் அமைந்துள்ளன. மேற்கில் வைத்திலிங்கம் மடமும் தெற்கில் நகுலேஸ்வரர் ஆலய வீதியும் உண்டு.

பெரியதாக அமைந்த இந்த மடத்தின் முன்புறத்திலும் கிழக்குப்புறத்திலும் உயர்ந்து வளர்ந்த வேம்புகள் நிழல் தருகின்றன. வேப்பஞ் சோலையினிடையே அமைந்த மடம் இது என்றுகூடச் சொல்லலாம். பல அறைகளையும் பெரிய மண்டபங்களையும் நீண்ட திண்ணை போன்ற அமைப்புக்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையும் உடைய இந்த மடத்தின் நடுவே பிள்ளையார் கோயிலொன்றுண்டு. அங்கே நித்திய பூசை ஒழுங்காக நடைபெறும். அத்துடன் புராண படனமும் அங்கு ஒழுக்காக நடைபெறுவதுண்டு. பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை முதலானோர் இந்நிகழ்விற் கலந்துகொண்டமையை என் மாணவப் பருவத்தே பார்த்திருக்கின்றேன். பேரறிஞர்கள் பலரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டிருக்கிறார்கள் என்றுந் தெரிகிறது.

பயன்தரு நூல்கள் ஏடுகள் பலவற்றையுங் கொண்டதொரு நூல் நிலையமும் இங்கு இருந்திருக்கிறது. வெளியிடங்களிலுள்ளவர்கள் முன்கூட்டியே பதிவுசெய்து வந்து தங்கிச் செல்லக்கூடிய அறைவசதிகள் இங்கே இருந்திருக்கின்றன.

வருபவர்கள் தாகசாந்தி செய்வதற்காக மடத்தின் முன்புறமுள்ள அறையொன்றில் மண் சாடியில் மோர் வைக்கப்பட்டிருக்கும். வேண்டியவர்கள் உணவு பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்புகளும் உள்ளே செய்யப்பட்டிருந்தன. நாளும் அன்னதானம் நடைபெறுவதுமுண்டு.

இந்த மடம் 1807இல் மானிப்பாயைச் சேர்ந்த கதிரவேற் சிறாப்பர் என்னும் பெரிய உள்ளம் படைத்தவொரு மகானாற் கட்டப்பட்டது. மடத்தின் தூய்மையைப் பேணச் சில தொழிலாளர்கள் அமர்த்தப்பட்டிருந்தனர். ஆலய பரிபாலனம் உணவுத் தேவைகள் என்பவற்றைக் கவனிக்க ஒரு சைவக் குடும்பமும் அமர்த்தப்பட்டிருந்தது. இவர்களுக்கு மேலாக முழு நிர்வாகத்தையுங் கவனிக்கவென ஒரு முகாமையாளரும் நியமனம் பெற்றிருந்தார். மிகப் புனிதமான மடமாக, வரும் யாத்திரிகர்களை ஏற்றுக்கொள்ளும் மடமாக இது இருந்தது ஒரு சிறப்பு.

**வைத்திலிங்கம் மடம்:**

சிறாப்பர் மடத்தின் மேற்கெல்லையில் வடக்குத் தெற்காக நீண்டுள்ள மடம் அது. வடக்கில் பகிரங்க வீதி, தெற்கிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கிலும் நகுலேஸ்வரர் ஆலய வீதி, சங்குவேலியைச் சேர்ந்த மட்டக்களப்பு வைத்திலிங்கம் என்பவராற் கட்டப்பட்டது.

அறைகள் பலவற்றைக் கொண்ட இந்த மடத்தின் நடுவே மேடைபோன்ற அமைதியை உடைய ஒரு கட்டிடம். அதைச்சுற்றிவர பூஞ்செடிகள் நாட்டப்பட்டதோர் வெளி. அதைச் சுற்றி நாற்புறமும் நடுவே நடக்கும் நிகழ்வுகளை இருந்து பார்க்கக் கூடிய அமைப்பு. கீரிமலை வரும் பெரியவர்களின் பேச்சுக்கள், மகாநாடுகள், கூட்டங்கள் எல்லாம் இங்கே நடைபெறும் முறைமை இருந்தது. என் மாணவப்பருவத்தில் சோமசுந்தரப் புலவர், பண்டிதமணி நவநீத கிருஷ்ண பாரதியார் போன்றோர் கலந்துகொண்ட கூட்டத்தில் யானும் பார்வையாளனாக இருந்ததுண்டு. மாணவர் காங்கிரஸ், இளைஞர் காங்கிரஸ் அமைப்புக்களின் கூட்டங்களும் இங்கே நடந்துள்ளன. சில கூட்டங்களுக்குச் சுவாமி விபுலானந்தர் தலைமை தாங்கியுள்ளார். என்னுஞ் செய்திகள் சீலன் கதிர்காமர் எழுதிய Handy Perinbanayagam (1980) என்னும் ஆங்கில நூலிற் காணப்படுகின்றன. கீரிமலைச் சந்திக்கு அருகாமையில் முன்புறத்தை உடைய இந்த மடத்தின் பின்புற வாயிலிலிருந்து நகுலேஸ்வரர் வீதியுலா வருங் கண்கொள்ளாக் காட்சியைத் தரிசிக்க முடியும்.

**கிருஷ்ணபிள்ளை மடம்:**

நகுலேஸ்வரர் ஆலயத்தின் தெற்கில் உள்ளது இது. வீதியைப் பார்த்தபடி முகப்பு உண்டு. தொல்புரத்துக் கிருஷ்ணபிள்ளை என்னும் பெரும்பெயர்த் தர்மவானாற் கட்டப்பட்டது. அதை நிர்வகிக்கவென முன்பொரு குடும்பம் நியமிக்கப்பட்டிருந்தது தெரியும். மிகக் குறைந்த அளவிலான உறுப்பினர் கலந்து உரையாட வேண்டி ஏற்படுஞ் சந்தர்ப்பங்களில் அமைதியைக் கருத்திற் கொண்டு இங்கு சென்றிருந்து உரையாடுவதுண்டு. புறம்போக்காக இருக்கின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணத்தால் இது அமைதி வேண்டுஞ் செயல்களுக்கு நல்லதோரிடம். போட்டிகளிற் பங்குபற்றுவோரை மதிப்பீடு செய்ய வாய்ப்பான இடமுங்கூட.

ஆடி அமாவாசை நாளில் இங்கு அன்னதானம் இடம்பெறும் வழக்கம் உணடு.

**செகராசசிங்கம் மடம்:**

கீரிமலைச் சந்தியிலிருந்து கேணியை நோக்கிச் செல்லும் வீதியின் வடக்குப்புறமாக உள்ளது. வடக்கு நோக்கி வெள்ளம் பாயவுள்ள வாய்க்காலுக்கு மேற்குப் புறத்தமைந்தது. தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் சாரணியத்திற்குப் பொறுப்பாயிருந்த ஆசிரியர் இ. விஸ்வநாதனின் துணைவியாரின் தந்தை, சண்டிலிப்பாய் செகராசசிங்கம் என்னுந் தர்மசீலரே இம்மடத்தைக் கட்டுவித்த மகானாவர். ஆடியமாவாசைத் தீர்த்தத்தன்று எழுந்தருளும் மூர்த்திகளுக்கு மடை பரவிப் பூசிக்கும் முறைமை முன்பு இருந்தது.

குறிப்பு:- *மற்றும் பெயர் விபரந் தெரியாத இரண்டொரு மடங்களும் இருந்திருக்கின்றன என்று தெரிகிறது. ஒன்று கேணிக்குத் தெற்புறமாகவும், மற்றொன்று ரேணுகாச்சார்ய ஆச்சிரமம் என முன்பொரு பெயருடன் இருந்ததென்றும், இன்னொன்று சேந்தன் களம் நோக்கிய வீதியில் அடங்காத் தமிழன் சி. சுந்தரலிங்கம் வீட்டிற்கு வடக்காக இருந்ததென்றும் கருத்துக்கள் உண்டு.*

**நகுலகிரிப்புராணம்**

நறுமணங்கம ழிழுதினால் நயந்த தீபத்தை
நிறுவிநந்திரு முன்னரே நிலையுற வைப்போர்
மறுவகன்றிடு நம்பத மருவியே மகிழ்வால்
இறுதியில்லதோ ரின்பவாழ் வுற்றினி திருப்பார்.

*மூர்த்திவிசேடமுரைத்த படலம், பாடல் இல. 13*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதிக் கோவில்கள்

ஈழத்தின் பிரபல ஞானியர்களைச் சமாதி வைத்த இடத்தை உள்ளடக்கிச் சிறிய சிறிய கோயில்களமைப்பது ஒரு முறைமை. அநேகமாக அந்தச் சமாதிக் கோயில்களிலே சிவலிங்கப் பிரதிஷ்டை நடைபெறுவதுதான் வழமை. பெரிய ஆனைக்குட்டிச் சாமியார் சமாதியடைந்த வேளை கொழும்பு முகத்துவாரத்திற் கட்டப்பட்ட சமாதியில் விநாயகரைப் பிரதிஷ்டை செய்துள்ளனர். கீரிமலையிற் பல சமாதிகள் காணப்படுகின்றன. அவை பற்றிய விபரங்கள் சரியாகத் தெரியவில்லை.

**சடையம்மா சமாதி:**

கீரிமலை மலைப்பாங்கான உயர்ந்த பகுதியில் கடற்கரை ஓரமாக இச்சமாதி உண்டு. சடையம்மா பிரபல ஞானியர்களுள் ஒருவர். அந்தச் சமாதிக் கோயிலில் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. இங்கு பூசை வழிபாடுகள் நடைபெறுவது வழக்கம். ஞானியர் வந்து நிஷ்டை கூடி இருப்பதும் உண்டு.

**சங்கரி சுப்பையர் சமாதி:**

இது சடையம்மா சமாதிக்குப் பக்கலில் உளது. வீரசைவ குலத்தைச் சேர்ந்தவர் இவர் என்ற சிந்தனை உண்டு.

**குழந்தைவேல் சுவாமி சமாதி:**

கீரிமலை மாரியம்மன் கோயிலுக்கு முன்புறம் சிறிதளவு தென்கிழக்கிலுள்ளது. இங்கு குருபூசை கிரமமாக நடைபெறுவதுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குமாரசுவாமிக் குருக்கள் சமாதி:**

குழந்தைவேல் சுவாமி சமாதியை அண்மித்ததாக இது உண்டு. இவரும் வீரசைவ குலத்தவராவர்.

குறிப்பு : *கேணிக்கரைப் பிள்ளையார் ஆலயத்தின் தென்மேற்கிலுள்ள சமாதி, சேந்தாங்களம் நோக்கிய வீதியில் சந்தியிலிருந்து மேற்கில் சுமார் நூறு மீற்றர் தொலைவில் தெருவின் வடக்கிலுள்ள சமாதி, அந்தியேட்டி மடத்தின் கிழக்கில் வீரசைவர்களின் மயானத்தில் உள்ள மூன்று சமாதிகள் விபரம் எதுவும் தெரியாதனவாக உள்ளன.*

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்,
விசேட சேர்க்கைப் பகுதி

நகுலகிரிப்புராணம்

முல்லையரும் பிணைநிகரும் முறுவலாளை
முழுமதியந் தனைநிகரும் முகத்தினாளை
மல்லலருள் சொரியுமலர்க் கண்ணினாளை
வரந்திகழும் வரதனிட மருவினாளை
அல்லைநிகர் கரியநிறக் குழலினாளை
யண்டமொடு முயிர்களைமுன் னளித்திட்டாளை
பல்லுயிருந் தொழவரிய படிவத்தாளைப்
பரிவினுடன் நெஞ்சமதிற் பரவிவாழ்வாம்.

*கடவுள் வாழ்த்து - உமை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# கலைவளம்

எமது நாகரிகம், பண்பாடு என்பவற்றைப் பிரதி-பலிப்பனவாக அமைந்தவை எமது கலைகள். வாழ்க்கைக் கோலங்களை, இல்வாழ்வின் இலக்குகளை அவற்றை நோக்கிய வழிகளையெல்லாம் அறிவிப்பனவாகவும் அவை அமைந்துவிடுகின்றன. ஓய்வு வேளைகளை இனிதாக அனுபவிக்க, அதேவேளை பயனுள்ளவையாகக் களிக்கவும் இந்தக் கலைகள் உறுதுணை புரிவனவாக அமைந்து-விடுகின்றன. உறுதியான நல்ல சிந்தனை முடிவுகளைக் கண்டுகொள்வதற்கு வாய்ப்பளிப்பனவாகவும் இவை அமைவது மகிழ்வைத் தருவது.

கலைகள் ஆலயங்களை மையமாகக் கொண்டவையாக அன்று வளர்ந்தன. ஆலயங்களிற் சாதாரணமாக நடைபெறும் விழாக்கள் கூடக் கலைகளின் ஆக்கிரமிப்புடனேயே நடைபெறுகின்றன. மாலை கட்டுதல், மாலை கொண்டு அலங்கரித்தல், நிலத்தைத் தூய்மையாக வைத்திருத்தல், வேண்டியவிடத்துக் கோலமிட்டுக் கொள்ளுதல், மாவிலைத் தோரணமிடுதல், தென்னோலைத் தோரணஞ் செய்தல், அவை கொண்டு அலங்கரித்தல் எல்லாமே கலை விளக்கந்-தான். பொங்கிப் படைத்தலில் பலகாரங்களைப்பரவுதலிற்கூட அலங்காரத்தை நிறைவாகக் கண்டிருக்கிறார்கள் பழந்தமிழ் மக்கள். புராண படனம், பண்ணிசை, சங்கிசை முதலானவை கூடக் கலைத்தோற்றங்களே. பின்னர் கீரிமலையென்றும் மாவிட்டபுரமென்றும் காங்கேசன்துறையென்றும் பேசப்படும் நிலப்பரப்பு முன்பு கோயிற்கடவை எனப்பட்டது. கோயிற்கடவை எனப்பட்ட இந்தப் பகுதியைச் சார்ந்த நிலப்பரப்பினுள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயங்கள் மிகுதியாக இடம்பெற்றுள்ளன. அந்த ஆலங்களைச் சார்ந்த கலைகளும் வளம் பெற்றுள்ளன.

பண்ணிசை, கரகமாடுதல், உடுக்கு வாத்தியம் இசைத்தல், சங்கூதுதல், கூத்தாடுதல், மேளம், நாதஸ்வரம் இசைத்தல் முதலான பலகலைகள் ஒன்றுடனொன்று போட்டியிட்டு வளர்ந்தன. இக்கலைகள் பல வீரசைவ குலத்தினரிடமாகி வளர்ந்தமை குறிப்பிடப்பட வேண்டிய-தொன்று. கீரிமலை வீரசைவர் சிவத்திரு தம்பையா செல்லையாஅவர்கள் ஒரு பண்ணிசைச் செல்வர். சுற்றாடலி-லுள்ள பல பாடசாலைகளிற் பகுதி நேரப் பண்ணிசை ஆசிரியராக அந்தக் காலத்தில் பணிபுரிந்திருக்கிறார்கள். இளவாலை மெய்கண்டான் வித்தியாலயத்தில் அவர் பண்ணிசை பயிற்றிய வகுப்பில் அடியேனும் ஒரு மாணவனாக இருந்ததுண்டு.

> *'தமிழ்ப் பண்ணிசைக்குங் கொட்டகைக் கூத்துக்கும் தம் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்தவர் கீரிமலையைச் சேர்ந்த வீரசைவர் த. செல்லையா அவர்கள். ஒன்பதாவது வயதிற் பண்ணிசைப் பயிற்சி பெறத் தொடங்கினார். இவருக்குக் குருவாக அமைந்தவர் இவரின் சகோதரி கணவர் சின்னையா என்பவர். யாழ்ப்பாணத்திற் சைவக் குருக்கள் சுப்பையாவிடமும் ஈராண்டு பண்ணிசைப் பயிற்சி பெற்றார். சென்னைக்குச் சென்று இராகவ முதலியாரிடம் பண்ணிசை பயின்று சொந்தமாகக் கீர்த்தனங்கள் பாடினார். திருவிழாக் காலங்களிற் கோவில்களிற் பண்ணிசை நிகழ்ச்சிகளை நடத்தியிருக்கிறார். மத்தளம் கெஞ்சிராவுடன் பிடிலையும் சேர்த்துக் கொள்வார்.....'*

என்று யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள் காங்கேயன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விமலர் என்னும் நூலில் காங்கேசந்துறைக் கல்வி வட்டாரக் கலைவளம் என்னும் கட்டுரையில் எழுதி-யுள்ளார்கள். சிவத்திரு செல்லையா அவர்கள் கூத்துக்களைப் பயிற்றும் அண்ணாவியாராகவும் இருந்திருக்கிறார்கள். தேவை ஏற்பட்டவிடத்துத் தாமே மேடையேறி நடித்ததுமுண்டு. குறவஞ்சி பள்ளு போன்ற நாடகங்கள் நகுலேஸ்வரச் சூழலில் ஆடப்பட்டனவென்றும், அதற்குக் காரணர்கள் வீரசைவர்களென்றும், சிறப்பாக வீரசைவர் செல்லையாவைக் குறிப்பிடலாமென்றும் கலைப்பேரரசு ஏ.ரி. பொன்னுத்துரை அவர்கள் வலி வடக்குப் பிரதேச மலரில் (பக்கம் 69-70) குறிப்பிட்டுள்ளார்கள்.

சிவத்திரு செல்லையா அவர்களின் புதல்வர் பொன்னுச்சாமி அவர்கள் இசைத்துறையில் வளர்ச்சி கண்டவர். நடிப்பிலும் தேர்ச்சி பெற்றவர். நாடகங்கள் பலவற்றில் நடித்த போதும் பக்கப்பாட்டுப் பாடுவதில் போற்றலுக்குரியவரானார். அந்தக் கௌரவம் பக்கப்பாட்டுப் பொன்னுச்சாமி என அவர் பெயருடன் ஒரு அடை கூடுவதற்குக் காரணமாகிவிட்டது. அவருடைய பக்கப்பாட்டுடன் இசைக்கருவி ஆர்மோனியமும் பொன்னுச்சாமி அவர்களுடன் ஒத்து இயங்கிப் பெருமை சேர்த்திருக்கிறது. அதனால் ஹார்மோனியச் சக்கரவர்த்தி பொன்னுச்சாமி என்றும் அழைக்கப்பட்டதுண்டு. எல்லா-வற்றுக்கும் மேலாகப் பொன்னுச்சாமி தேசிகர் என்று கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடப்படவேண்டியது. திரு. பொன்னுச்சாமி தேசிகர் அவர்களுடைய துணைவியார் ராமலக்சுமி ஒரு சிறந்த நாடகக் கலைஞர். இரண்டு பெண்களை நாடகத் துறைக்கென்றும் இசைத்துறைக்கென்றும் பெற்றுத் தந்த அவர் முதுமைக்கு முன்னதாகவே இறைவன் திருவடி நீழலை அடைந்துவிட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவத்திரு செல்லையா அவர்களின் இளைய மகளின் கணவர் முருகேசு வர்ணகுலசிங்கம் அவர்கள் சங்கீத-ரத்தினம். உலகம் புகழ் மஹாராஜபுரம் வி. சந்தானம் அவர்களின் முதன் மாணவர் என்னும் பெருமைக்குரியவர். பண்ணிசை சங்கீத ஞானம் என்பவற்றில் உயர்தரம் பெற்ற வர்ண குலசிங்கம் அவர்கள் வீணை, கெஞ்சிரா, உடுக்கை, வயலின் என்னும் வாத்தியங்களையும் மீட்டவல்ல பல்லியக் கலைஞராவர். இசையாசிரியராகவிருந்து ஓய்வுபெற்ற இவரது மைந்தன் வர்ணராமேஸ்வரனும் ஒரு இசைத்துறை மேதை. இவரும் ஒரு பல்லியக் கலைஞர். இன்று கனடாவில் வாழ்ந்துகொண்டிருக்கும் அவர் குரலை உலகம் முழுவதுங் கேட்டுச் சுவைக்கின்றது. வர்ணகுலசிங்கம் அவர்களின் தந்தை அருணாசலம் முருகேசு அவர்கள் உடுக்கை வாசிப்பதில் விற்பன்னர். அதேவேளை ஒரு நாடகக் கலைஞருங் கூட. இவர்கள் கோவிற்கடவையுடனாகிய நாத அலை என்னுஞ் சிற்றூரை சேர்ந்தவர்கள்.

கீரிமலையைச் சேர்ந்த செல்வி நாகம்மா கதிர்காமர் இசைக் கலையில் தேர்ச்சி பெற்றவர். இந்தியா சென்று பயிற்சி பெற்ற சங்கீதபூசணம். பாபநாசஞ்சிவன் என்னும் இசைத்துறைப் பேராளரைக் குருவாகக் கொண்டு அவர் விருப்பிற்குரிய முதன் மாணவியாகத் திகழ்ந்தவர். உயர்ந்த சாரீர வளம் பொருந்திய இவர் இலங்கையிலுள்ள உயர்தரக் கல்லூரிகளுள் ஒன்றாகிய மகாஜனவில் இறுதிவரை இசையாசிரியராகப் பணியாற்றி மிகப் பலரைச் சங்கீத விற்பன்னர்களாக்கியவர். ஓய்வுபெற்றபின் இப்போது இந்தியாவில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்.

நகுலேஸ்வரர் ஆலயத்தின் இன்றைய ஆலய முதல்வர் சிவஸ்ரீ நகுலேஸ்வரக் குருக்களின் அப்பாவின் சகோதரர்களுள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர் சிவஸ்ரீ சபாரதினக் குருக்கள். கலைகளின் உறைவிடம் அவர் என்று சொல்லலாம். தனது பிள்ளைகள் கலைத்துறையுடனாகி வளரவேண்டுமென்னும் ஆவல் மீதூரப் பெற்றவர். வயலின், மிருதங்கம், கடம், வீணை ஆதியாம் இசைக் கருவிகளைப் பயன்கொள்ளக்கூடிய வல்லவர்களாக்கி மகிழ்ந்தவர் சிவஸ்ரீ சபாரத்தினக் குருக்கள். மூத்த மகன் சிவஸ்ரீ சுப்பிரமணியக் குருக்கள். மிருதங்க வித்துவான், அதேவேளை சிறந்த நாடகக் கலைஞருந்தான். பல நாடகங்களில் நடித்தவர். பலவற்றை மேடையேற்றியவர். சிறந்த நாடகக் கலைஞர்களை உருவாக்கியவர். மூத்த மகள் திருமதி நகுலேஸ்வரியம்மா கணேசையர் நடனக் கலை நாடகக் கலை இரண்டிலுந் தேர்ந்தவர். இரண்டாவது மகன் இன்று இந்தியாவில் வாழ்ந்துகொண்டிருப்பவர், சிவஸ்ரீ சுந்தரமூர்த்தி சர்மா கடவாத்தியக் கலைஞர். அதேவேளை நாடகக் கலைஞருங் கூட. அடுத்தவர் சிவஸ்ரீ பாலகிருஷ்ணக் குருக்கள், இப்பொழுது பிரன்சில் வாழ்பவர். நல்ல நாடகக் கலைஞர். சம்ஸ்கிருதத்தைப் பாலபண்டிதம் வரை கற்றுத் தேர்ந்தவர். மற்றையவர் நாராயணக் குருக்கள்: கெஞ்சிரா வாசிப்பதில் வல்லவர். அண்ணாவுடனாகி நாடகங்களிலும் நடித்துள்ளார். மற்றொரு மகள் பகவதியம்மா இரத்தினனேஸ்வரக் குருக்கள் வயலினை மீட்டுவதில் தேர்ச்சி கண்டவர். சிவஸ்ரீ சபாரத்தினக் குருக்கள் அவர்கள் பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் அனைவருமே நாடகக் கலையில் உயர்ந்து நின்றவர்கள் என்பது மறுக்க முடியாததொரு உண்மை. கீரிமலை உபதபாலகத்தின் பொறுப்புவாய்ந்த அதிபராகப் பணியாற்றிய சிவஸ்ரீ ச. சுப்பிரமணியக் குருக்களின் மூத்தமகள் கௌரிமாலாதி அவர்கள் கீரிமலை நகுலேஸ்வர வித்தியாலய நாடகங்களில் நடித்தும் பரிசில் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

 8542 cc

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவிற்கடவையுடனான மாவிட்டபுரம் மங்கல வாத்தியங்களாய மேளம் நாதஸ்வரம் என்பவற்றின் இனிய நாதத்தை என்றுந் தன்னகத்துக் கொண்டிருந்தது. உருத்திராபதி அவர் தம்பி நடராஜா (இவர் பின்னர் பருத்தித்துறையில் வாழ்ந்தவர்கள்) இராசா என்போர் உயர்தர நாதஸ்வர விற்பன்னர்கள். குழந்தைவேலு தவில் வித்துவான். உருத்திராபதியின் பெண்பிள்ளைகள் இருவர் உயர்ந்த சங்கீத ஞானம் பெற்றவர்கள்.

பல கலைஞர்களைத் தமது எழுத்து மூலம் துலங்க வைத்த பெருமை மாவிட்டபுரம் த. சண்முகசுந்தரம் அவர்களைச் சார்ந்தது. பல நாடகங்களை எழுதி வெளியிட்டவர் என்பதுங் குறிப்பிடத்தக்கது.

புராண படன மரபு நகுலேஸ்வரர் ஆலயத்தில் நிலைபெற்றுத் தொடர்ந்திருக்கிறது. சிறாப்பர் மடத்திலும் தொடர்ந்திருக்கிறது. பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை, என்போர் அந்தக் கலையை வளர்த்தனர். வைத்தீஸ்வர வித்தியாலய அதிபர் அம்பிகைபாகன் பண்டிதர் பொன்னம்பலம், புராணிகர் ஆறுப்பிள்ளை என்போருமம அப்பணிக்கு உதவினர்.

**நகுலகிரிப்புராணம்**

சிவனடித் தொண்டினிற் சிறந்து ளோரையும்
புவனமேல் விரதங்கள் பூண்டு ளோரையும்
தவமிகு பெரியவர் தமையும் பூசித்தே
பவநெறி யகன்றிடப் பரிவி னூட்டுவார்

*திருநாட்டுப் படலம், பாடல் இல. 21*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# கல்விவளம்

சைவ பாரம்பரியத்தில் ஊறியவர்கள் பழம்பெருமையை உடைமையாக்கிக் கண்டவர்கள் - நகுலேஸ்வரத்தில் ஒரு சில தினங்களாவது தரித்துச் செல்வதை விரும்புவர். அல்லது அடிக்கடி அங்கு வந்து செல்வதை ஏற்றுக்கொள்வர். அந்தப் புண்ணிய பூமியுடனான தமது உறவு தொடர வேண்டு-மென்பதுதான் அவர்கள் உள்ளுணர்விற்கான காரண-மாகலாம். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, நவாலியூர் சோமசுந்தரப்புலவர் மகாவித்துவான் சி. கணேசையர் போன்ற பெரியோர்கள்கூட இந்த விதிக்கு விலக்காகி இருக்கவில்லை.

சிராத்தவிதி, ஆசௌச தீபிகை - வினாவிடை முதலான நூல்களின் ஆசிரியரான மாதகல் சு. ஏரம்பையர் சங்கர பண்டிதரிடம் பாடங்கேட்டவர். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரிடம் ஐயங்களைக் கேட்டுத் தெளிந்துகொண்டவர். அவர் தம் வாழ்நாளின் பிற்பகுதியை நகுலேஸ்வரத்திலே கழிக்க விரும்பிக் கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தின் மேற்கிலிருந்த கிருஷ்ணபிள்ளை மடத்தின் வடபுறத்தமைந்த வீட்டில் வந்தமர்ந்தார். அந்தவேளை ஸ்ரீலஸ்ரீ நாவலர் அவர்களின் தருமப் பொருள் கொண்டு திரு. த. கைலாசபிள்ளையால் தாபிக்கப்பட்ட பாடசாலையை அவர்களுடைய அற்பப் பொருளுதவியைப் பெற்றும் பெறாமலும், தாமே ஆசிரியராக-விருந்து நடத்திவந்தார். உடம்பிலேற்பட்ட அசௌகரியங்-காரணமாக மாதகல் சென்றவர் திரும்பவேயில்லை. 1914இல் அவர் மறைவு நிகழ்ந்தது. தமிழ் சம்ஸகிருதம் என்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருமொழிகளிலும் இலக்கண இலக்கியங்கள் அங்கு கற்பிக்கப்பட்டுள்ளன. இத்தகவல் புன்னாலைக்கட்டுவன் வித்துவான் பிரம்மஸ்ரீ சி. கணேசையர் அவர்களால் எழுதப்பட்ட ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரிதம் என்னும் நூலின் சு. ஏரம்பையர் என்னுங் கட்டுரையிலிருந்து பெறப்பட்டது.

பின்னர் வேறோர் கல்வி நிலையம் நகுலாம்பிகா பாடசாலை என்ற பெயருடன் இயங்கியுள்ளதென்று தெரிகின்றது. 'நகுலேஸ்வரசுவாமி கோயில் ஆதீன கர்த்தர் ப்ரமஸ்ரீ கா. தியாகராசக் குருக்கள் சிரேஷ்ட புத்திரர் ப்ரம்ஸ்ரீ குமாரசுவாமி சிவாசாரியார் அவர்களால் நடத்தப்பட்டு வந்த நகுலாம்பிகா பாடசாலையின் மாணவர்கள் இரகுவம்சம், அமரம்பர்த் திருஹரி, நீதிசதகம், வியாகரணசங்கிரகம், மார்க்கோபதேச, அஷ்டாத்திலாயீ சூத்திர பாடம், தேவீஸ் தோத்திரம் முதலிய நூல்களிலே பரீட்சை செய்து பார்த்தோம். ஒவ்வொரு பிரச்சினைகளுக்கும் அவர்கள் தக்கவாறே உத்தரங் கூறினார்கள். தொடங்கிய காலம் அற்பமாயினும் இப்பாடங்களிற் பெரிய தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள்,

ஷை சிவாச்சாரியார்கள் கற்பித்திருக்கும் முறையும் அவர்கள் பிரயாசமும் கற்பிக்கும் பிரியமும் மிகவும் பாராட்டற்பாலன. அவருடைய முயற்சியைப் பெற்றார்களும் தமது பிள்ளைகளைத் தவறாதனுப்பித் தைரியப்படுத்தல் அவசியமாம்......'

சுன்னாகம் அ. குமாரசாமிப்பிள்ளை அவர்கள் பரீட்சைத் தொகுப்பிலிருந்து பெறப்பட்டது இது. நகுலேஸ்வர குரு பவள விழா மலர்: பழமையின் பெருமை தொகுதியில் 13ஆம் பக்கம். இது 1915 இற்கு அண்மையான செய்தி.

ஒரு சைவாசிரிய கலாசாலையை நடத்தவேண்டுமென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்வத்துடன் முயற்சித்த காரைநகர் தந்த தவப்புதல்வர் அருணாசலம் தேர்வு செய்த பொருத்தமான இடம் நகுலேஸ்வரம். நகுலேஸ்வரர் ஆலயத்தின் மேற்குப் புறத்தே கிருஷ்ணபிள்ளை மடத்தின் வடக்கேயமைந்த, மாதகல் சு. ஏரம்பையர் வாழ்ந்த வீடே பயிற்சிக் கலாசாலைக்குப் பொருத்தமான இடமாகக் கண்டுகொள்ளப்பட்டது.

'ஆசிரியர் பயிற்சிக்கான நுழைவுப் பரீட்சையில் சித்தியடைந்தாலும் திருச்சபைகளினால் நடத்தப்படும் பயிற்சிக் கலாசாலைகளின் கதவு இந்துக்களுக்கு இறுக்கி மூடப்பட்டிருந்தது. இந்தஅநீதியான நிலையை உணர்ந்து இந்துப் பெரியார்கள் சிலர் இந்து ஆசிரியர் பயிற்சிப் பாடசாலையொன்றை நிறுவும் நோக்குடன் கூடிய கூட்டத்தின் முடிபின்படி கீரிமலையில் பயிற்சிப் பாடசாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இக்கூட்டத்திற் பலம்வாய்ந்ததோர் செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.......' இச்செய்தி 1930ஆம் ஆண்டின் HINDU BOARD வருடாந்த அறிக்கையிற் காணப்படுகின்றதென்று 1985இல் வெளியாய காங்கேயன் கல்விமலரின் 'தமிழாசிரியர் பயிற்சிப் பின்னணியில் காங்கேசன்துறைக் கல்வி வட்டாரம்' என்னுந் தலைப்பில் மு. சிவராசா B.Sc. Dip. in. Ed. அவர்கள் எழுதிய கட்டுரையிற் காணப்படுகிறது.

இந்த முயற்சிகளின் பின்னர் நகுலேஸ்வரச் சூழலில் ஒரு சைவப் பாடசாலை உருவாகத்தான் வேண்டும் என்று பலருஞ் சிந்தித்த சிந்தனையைச் செயல்வடிவிற்குக் கொண்டுவர விரும்பி முன்னின்றுழைத்தவர்கள் கருகம்பனையைச் சேர்ந்த திரு. வ. கந்தையா, திரு. சு. கனகசபை என்போராவர். திரு. சு. கனசபை கொடுத்த அவர் சொந்த நிலம் பத்துப் பரப்பில் தற்காலிக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொட்டிலொன்றமைத்துக் கீரிமலை நகுலேஸ்வர வித்தியாலயம் என்ற பெயரில் பாடசாலையை ஆரம்பித்தனர். ஆசிரியராகப் பணிபுரிந்து கொண்டிருந்த திரு. வ. கந்தையா அவர்கள் தன் பதவியைத் துறந்து வந்து இப்பாடசாலையின் தலைமையை ஏற்று நடத்தினார்கள். செல்வி கே. இராசம்மா, திரு. கா. சரவணமுத்து, திரு. பொ.நாகரத்தினம் என்போர் உதவியாசிரியர்களாயினர். அனைவரும் சம்பளத்தை எதிர்பாராது சேவை ஒன்றே என்ற உயர் இலட்சியத்துடன் பணிபுரிந்தனர். 1955ஆம் ஆண்டு யூலை முதலாந் திகதி கீரிமலை நகுலேஸ்வர வித்தியாலயம் என பதிவு பெற்றதிலிருந்து பாடசாலை வளர்ச்சி காணத்தொடங்கியது. 1960ஆம் ஆண்டு முந்நூறு மாணவர்களுடனும் பத்து ஆசிரியர்களுடனும் க.பொ.த. சாதாரண வகுப்புவரை வளர்ச்சி கண்டது. 1980 இல் மகாவித்தியாலயமாக உயர்வு கண்டது. மேல்மாடிக் கட்டிடங்களுடன் உயர்ந்து நின்ற வித்தியாலயம் அண்மைக் காலப் போர்ச் சூழலினால் எல்லாவற்றையும் இழந்து வெறுந் நிலமாகியுள்ளது. அந்தநிலமும் அதியுயர் பாதுகாப்பு வலயத்துள்....!

**நகுலகிரிப்புராணம்**

மூண்டவல்வினைநெறியினால்முனிவரிலொருவன்
நீண்டகீரியின்முகத்தொடுநிலமிசையுதித்தே
ஆண்டளப்பிலகாலமாயரன்கழல்நெஞ்சிற்
பூண்டவன்புடனிருந்துமாதவம்புரிந்தனனால்.

*நகுலமுனி யாத்திரைப் படலம், பாடல் இல. 2*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# கீரிமலைச்சிவன் கோயில்
# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான்
# 1878 -05 -24இல்
# வெளியிட்ட துண்டுப்பிரசுரம்

யாழ்ப்பாணத்திலே மாவிட்டபுரத்திற்கு வடமேற்கே இரண்டு மைல் தூரத்தில் உள்ள கீரிமலையிலே ஆதியில் ஒரு பெரிய சிவன் கோயில் இருந்தது. அது போர்த்துக்கேயரால் இடிக்கப்பட்டது. கீரிமலையின் அடியினின்றுஞ் சுத்த சலம் ஊற்றெடுத்துக் கடலினுள்ளே பாய்கின்றது. அந்தச் சங்கமம் புண்ணிய தீர்த்தம் என்று விசுவசித்தன்றோ யாழ்ப்பாணம் எங்கும் உள்ள சைவ சமய சனங்கள் விசேஷ தினங்களிலே அங்கே போய் ஸ்நானஞ் செய்கிறார்கள். அநேகர் அங்கே சங்கற்பஞ் செய்து ஒரு மண்டலம் அரை மண்டலம் ஸ்நானஞ் செய்துகொண்டிருக்கிறார்கள். அநேகர் அந்தியேட்டி சிரார்த்தம் முதலிய கிரியைகளை அங்கே போய்ச் செய்கிறார்கள். அவர்களெல்லாம் ஸ்நானஞ் செய்தவுடனே சுவாமி தரிசனஞ் செய்யும் பொருட்டு அங்கே ஒரு கோயில் இல்லையே! யாழ்ப்பாணத்தில் எத்தனையோ இடங்களிலே கோயில் சமீபத்திலிருக்கவும் புதிது புதிதாகக் கோயில் கட்டுவிக்கின்ற நம்மவர்கள் எல்லாச் சனங்களுக்கும் பொதுத் தலமாகிய கீரிமலையிலே ஒரு கோயில் கட்டுவிக்க இதுவரையும் நினையாதது என்னையோ?

கீரிமலையிலே ஒரு கோயில் கட்டுவித்துச் சிவலிங்கம் பிரதிட்டை செய்வித்து நித்திய பூசை நடத்துவிப்பது மேலாகிய சிவதருமம். தலவிசேட தீர்த்த விசேடத்தோடு மூர்த்தி விசேடமுங் கூடுமாயின் மிக நலமாமே. யாழ்ப்பாணத்துச் சனங்கள் தங்கள் தங்களால் இயன்ற பொருளுதவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வார்களானால் இந்தச் சிவ தருமத்தைத் தொடக்கி நிறைவேற்றலாம்.

1. சனங்கள் இந்தச் சிவதருமத்தின் பொருட்டுப் பணமாகவேனும் மரம் கல் சுண்ணாம்பு முதலிய உபகரணங்களாகவேனும் தங்களால் இயன்றவை கொடுத்தல் வேண்டும்.

2. கீரிமலையிலே அந்தியேட்டி, சிரார்த்தம் செய்யும் சனங்கள் தகுதியாகிய தானம் இரண்டு இந்தச் சிவதருமத்தின் பொருட்டுக் கொடுத்தல் வேண்டும்.

3. கீரிமலையிலே அந்தியேட்டி செய்யும் குருமார்கள் அந்தியேட்டித் தக்ஷிணையிலே அந்தியேட்டி ஒன்றுக்குக் கால் ரூபா வீதம் இந்தச் சிவதருமத்தின் பொருட்டுக் கொடுத்தல் வேண்டும்.

4. கீரிமலையிலே விசேஷ தினங்களிலே போய் ஸ்நானஞ் செய்கின்ற சனங்கள் இந்தச் சிவதருமத்தின் பொருட்டு அங்கே வைக்கப்படும் உண்டியற்பெட்டியிலே தங்கள் தங்களால் இயன்ற பணத்தொகை போடல் வேண்டும்.

5. கீரிமலைக்குச் சமீபத்திலுள்ள ஊர்களில் வசிக்கின்ற சைவசமயச் சனங்கள் தங்கள் தங்கள் நிலங்களிலே நெல், சிறு தானியங்கள், காய், கனி, வெற்றிலை, புகையிலை முதலிய பலன்கள் உண்டாகும் பொழுது அவைகளிலே தங்களால் இயன்றது இந்தச் சிவதருமத்தின் பொருட்டுக் கொடுத்தல் வேண்டும்.

6. கீரிமலைக்குச் சமீபத்திலுள்ள ஊர்களில் வசிக்கின்ற சைவசமயச் சனங்கள் இந்தச் சிவதருமத்தின் பொருட்டுத் தங்கள் தங்கள் வீடுகளிலே போடப்படுகின்ற குட்டான்களிலே நாள் ஒன்றுக்கு ஒரு பிடி அரிசி போட்டு அந்த அரிசியை மாத முடிவில் வருந் தண்டலாளரிடத்தில் ஒப்பித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும்.

7. காங்கேசன்துறையிலே அரிசி நெல் இறக்குமதி செய்கிற வியாபாரிகள் அரிசி கரிசை (இருநூறு பறை கொண்ட அளவு) ஒன்றுக்கு ரூபா அரை, நெல் கரிசை ஒன்றுக்கு ரூபா கால் வீத மகமை (தருமக்கொடை) இந்தச் சிவத்தருமத்தின் பொருட்டுக் கொடுத்தல் வேண்டும்.

8. தகுதியாகிய பணத்தொகை வைத்துக்கொண்டு சிவதருமஞ் செய்யவிரும்புகிறவர்கள் கீரிமலைச் சிவன் கோயிலிலே தங்கள் தங்களால் இயன்ற திருப்பணி செய்வித்துக்கொள்ளலாம். அவரவர் செய்வித்த திருப்பணியிலே அவரவர் பெயர் வெட்டப்படும்.

**சுரங்கப்பாதை:**

கீரிமலைச் சிவன் கோயிலுக்குத் தென்கிழக்குப் புறமாக ஒரு பாரிய கிடங்கு உண்டு கிடங்கின் அடித்தளத்திலிருந்து ஒரு பனை ஒரு கொன்றை என்பன பெரிதாக வளர்ந்துள்ளன. மற்றும் பல்வேறு செடிகளும் வளர்ந்து காடாகிவிட்டது. என் மாணவப் பருவத்தே இறங்கிப் பார்த்துள்ளேன். ஒரு சுரங்கப்பாதை வடக்குத் தெற்காகச் சென்று கொண்டிருந்தது. விடுப்பூக்கங் காரணமாக இரண்டொரு அடி உள்ளே நகர்ந்தோம். ஒரே இருட்டு. பயம் காரணமாக எமது போக்கை மாற்றிக்கொண்டோம். வௌவால்கள் இருப்பது போன்ற மணம் இருந்தது. அதனால் வௌவாற்புரை என்றும் பெயர் வழக்குண்டு.

இது தொண்டமானாறு செல்வச் சந்நிதி வரை சென்றுவரக்கூடிய பாதை என்றும் மாருதப்புரவீகவல்லி கீரிமலைக்கு வந்து தரிசிப்பதற்கான பாதை என்றுஞ் சொல்வர். அகழ்வாராய்ச்சியாளர்க்கு நல்லதோர் விருந்து இது எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# கீரிமலைச் சிவன் கோயில்

தற்காலத்திலே பூமியில் உள்ள நாடுகள் எல்லா-வற்றினும், கல்வி கேள்வி சிவபுண்ணியாபிமானம் நல்லொழுக்கம் முதலிய மங்கலங்கள் பலவற்றாலும் பொலிந்து விளங்கிய சைவப்பிராமணர்களுஞ், சைவவித்து-வான்களுஞ், சைவப்பிரபுக்களுஞ், சைவபத்திரிகைகளோடு வாழப்பெற்றதாதலால், நம்முடைய ஈழநாடே மிகச்சிறந்த நாடு. இவ்வுண்மை கைலாசபுராணத்துக் கூறியவற்றானும் இனிது துணியப்படும்.

இவ்வீழநாட்டில் உள்ள தீர்த்தங்கள் எல்லாவற்றினும் மிகச்சிறந்த தீர்த்தமாவது யாழ்ப்பாணத்துக் கீரிமலையிலுள்ள சாகர சங்கமம் என்னும் அதிதிவ்விய தீர்த்தமே. இத்தீர்த்தத்தின் மகிமையும் இதன் சமீபத்திலே இருந்த சிவாலயத்தின் மகிமையும், பிறவும் சம்ஸ்கிருத தக்ஷிணகைலாச புராணத்தில் மிக விரித்துக்கூறப்பட்டன.

அவற்றுட்சில இங்கே காட்டப்படுகின்றன:

ஆதியிலே சிவபெருமான் உமையம்மையார் பொருட்டுச் சாகரசங்கம தீர்த்தத்தை அமைத்தருளினார். கீரிமலையில் தெற்கில் ஊறுகின்ற சுத்தசலமும் வடக்கில் ஊறுகின்ற உப்புச்சலமும் கலந்து சிவரூபமும் சத்தி ரூபமுமாயிருத்தலினாலே இத்தீர்த்தம் மிகச்சிறந்தது.

கிருதயுகத்திலே, கீரிமுகமுடைய நகுலமுனி என்பவர் முசுகுந்தராசனுடனே வந்து அத்தீர்த்தத்திலே ஸ்நானஞ் செய்தமையாற் கீரிமுகம் மாறப்பெற்று சுவாமிதரிசனமுஞ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்துகொண்டு அம்மலையின் குகையிலே நெடுங்காலம் வாசஞ்செய்தார். அதனாற்றான் அம்மலையும், அத்தீர்த்தமும், அக்கோயிலும், அங்குள்ள சிவலிங்கப் பெருமானும், அம்மையாரும் அவர்பெயரால் வழங்கப்பட்டு வருவதாயிற்று.

திரேதாயுகத்திலே, இராவணசங்கார காலத்தில் அவனுடைய அற்புதமாகிய வீணையைச் சுசங்கீதன் என்னுங் கந்தவருவன் கவர்ந்துகொண்டு மனிதரூபம் உடையனாகி வந்து, அத்தீர்த்தத்திலே ஸ்நானஞ் செய்து அப்பெருமானைப் பூசித்து வீணாகானம் பண்ணினான். அப்பெருமான் பிரீதியுற்று வெளிப்பட்டு 'சுசங்கீதனே! நீ வீணாபாணியாய் நின்று பாடினமையால் இவ்விடம் வீணாபாணம் எனப்படுக. நீ இக்காடுகளை வெட்டிப் பட்டணமாக்கு' என்று சொல்லி மறைந்தருளினார். அப்படியே அவன் காடுகளை வெட்டிப் பட்டணமாக்கி, அழிந்த கோயில்களைப் புதுக்கிப் பலகுடிகளையும் இருத்தி, அவருடைய அனுமதி பெற்றுக்கொண்டு தன்புரத்திற்குப் போனான்.

துவாபரயுகத்திலே, நளராசன் கோணேசரைச் சேவித்துக் கொண்டு, அங்கே வந்து தீர்த்தஸ்நானமுந் தரிசனமுஞ் செய்து, அந்நகுலேசருடைய கிருபையிற்றானே கலிபீடை நீங்கப்பெற்றான். பின்பு அருச்சுனனும் வந்து, ஸ்நானமுந் தரிசனமுஞ் செய்து, நகுலேசரிடத்தே வேண்டிய வரங்களைப் பெற்றுப் போனான்.

கலியுகத்திலே வங்கதேசத்தில் இருந்து விசயராசன் என்பவன் காசியிற் சென்று விசுவநாத சுவாமியினுடைய அருளினாலே இவ்விலங்கையிலே வந்து நகுலேசர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயிலையும் பிறவற்றையும் புதுக்கிக்கொண்டு இராச்சியம் பண்ணினான். பின்பு திசையுக்கிர சோழ மகாராசாவினு-டைய மகளாகிய மாருதப்பிரவல்லி என்பவள் குன்ம நோயினால் வருந்திப் பலதலங்களுக்கு யாத்திரை செய்தும் நீங்கப்பெறாது, சாந்த லிங்கர் என்னும் முனிவரு-டைய போதனையினாலே அங்கேவந்து நகுலமுனிவரைக் கண்டு வணங்கி அவர்சொற்படி தீர்த்தஸ்நானமுந் தரிசனமுஞ் செய்து குன்மநோயேயன்றிக் குதிரைமுகமும் மாறப்பெற்று நெடுங்காலம் அங்கேயிருந்தாள்.

இப்படியேயுகந்தோறும் பற்பல தேவர் முனிவர் கந்தருவர் முதலியோர் அங்கே வந்து சேவித்துப் பற்பல சித்திகளையும் அடைந்தார்களென்பது தக்ஷிணகைலாச புராணத்தில் மிகவிரிவாகக் கூறப்பட்டது.

இவ்வளவு பெருஞ் சிறப்பினதாகிய நகுலேசுவரம் என்னும் அக்கீரிமலைச் சிவன் கோயிலானது போர்த்துக்கேயர் அரசாண்ட காலத்திலே அவரால் இடிக்கப்பட்டு அழிந்தது.

பின்பு காலந்தோறும் அவ்விடத்திலே தீர்த்தத்துக்கு வந்து கூடுகிற சனங்கள் ஸ்நானஞ்செய்த உடனே சிவலிங்கதரிசனஞ் செய்ய வழியில்லாது முட்டுப்பட்டு வருதலைக் கண்டு ஸ்ரீலஸ்ரீ சற்குருநாதசுவாமிகள் ஆகிய நாவலரவர்கள் குறிப்பின்படி அவ்விடத்திலே ஒரு பெரிய சிவன்கோயில் கட்டுவிக்கப்படுகின்றது.

இதுமகாவிசேஷ சிவபுண்ணியம் என்பது யாரும் மறுக்கலாகாத உண்மை. ஏன், சிவலிங்க ஸ்தாபனமே விசேஷ சிவபுண்ணியமென்று சைவநூல்களெல்லாம் பேசுகின்றன: அதுவும் மிகச்சிறந்த புண்ணிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்த்தக்கரையிலே செய்யப்படுவதாயின், அதன் பெருமைக்கு வேறுபிரமாணமும் வேண்டுமா?

கனம்பொருந்திய சைவப்பிரபுக்களே!

இச்சிவபுண்ணியத்தின் பெருமையைச் சற்றே சிந்திக்கக் கடவீர்கள். இது உங்கள் உதவியாற்றானே முடியற்பாலது என்று துணியக்கடவீர்கள். இதன் வரவுசெலவு கணக்குகள் ஆவேதங்களில் வெளிப்படுத்தப்படுதலைப் பார்க்கக் கடவீர்கள். நீங்களெல்லீரும் இச்சிவபுண்ணியத்துக்கு இயன்ற இயன்ற பொருள் உகபரித்து இருமையின்பமும் பெற்றுய்ய முயலக்கடவீர்கள்.

இங்ஙனம்
சுன்னாகம்
**அ. குமாரசுவாமிப்பிள்ளை**
சுபானுளு
மாசி மீ

உதவியவர்:
திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# நகுலகிரிப் புராணம்

புன்னாலைக்கட்டுவன்
கவிஞர்சிகாமணி
**பிரம்மஸ்ரீ கா. அப்பாசாமி ஐயர்.**

## காப்பு

அலைதிகழுங் கடலுலகி னாருயிர்க ளெண்ணமுறக்
கலைதிகழு மதிமவுலிக் கடவுளுமை கண்களிக்கத்
தலைதிகழும் பிரணவத்தின் முதலெழுந்து தனிநகுல
மலைதிகழும் வீரகத்தி விநாயகனே மனந்துதிப்பாம்.

## திருநாட்டுப் படலம்

பாச நீங்குதொன் முனிவரர் பண்ணவர் பரவு
மீச னாரரு ணிறைந்திடு மிலங்கையின் வடபால்
மாச கன்றிடு மீழநாட் டணிதனை மண்ணோர்
கேச மோடுறு மியல்பினா னெடிதுரை செய்வாம்.

வாக்கி னீடிய தலைமகள் வடிவென வயங்கி
மீக்கி ளர்ந்துறு புயலினம் விரிகடல் பருகிக்
காக்கு நல்லருள் விமலையி னுருவெனக் கறுத்து
நீக்க மின்றியே நகுலமா னெடுவரை படிந்த.

---

முதற்பதிப்பு : கீரிமலை இந்துசமய அபிவிருத்திச் சங்க வெளியீடு.
இரண்டாம் பதிப்பு: 1980 விழிசிட்டி ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர் திரு. செ. சிவசுப்பிரமணியம் எழுதிய உரையுடன் கீரிமலைச் சிவநெறிக் கழக வெளியீடாக 1980இல் வெளிவந்துள்ளது. கடவுள் வாழ்த்து அவையடக்கம் திருநாட்டுப்படலம், திருநகரப்படலம், பாயிரப்படலம் என்பவற்றோடு தலவிசேடம் மூர்த்தி விசேடம், தீர்த்த விசேடப் படலங்களும் நகுலமுனி, இராமர், நளன், அருச்சுனன், மாருதப்புரவீகவல்லி யாத்திரைப் பாடல்களுமாகப் பதின்மூன்று படலங்களில் 630 விருத்தப்பாக்களால் ஆனது.

தகவல்: நகுலேஸ்வர குரு பவளவிழா மலர்-2000.



202210

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# நகுலமலைக்குறவஞ்சி

அராலி விசுவநாத சாத்திரியார்.

வடமலைச் சிகர மொன்றினை வாயு
கடலிடை வீழ்த்துமக் காரணப் பெயரால்
வாழுமண் டலத்தின் மகிதலம் போற்றத்
தென்கயி லையினுந் திருக்கேதீச் சரத்தினும்
அன்புறு கௌரியோ டரன்வீற் றிருந்தனன்
சங்கம் வருவித் தகுநகு லாசலத்
துங்கம் துறுகதை சொல்லுவன் முன்னாள்

---

தரு

சூரியன் குலத்தில்வரு முக்கிரசோழ னென்னு மிராசனுக்கு
பூரணமா யொருமகள்தான் பரிபோலு முகங்கொண்டுதித்தாள்
அந்தமட மான்வளர்ந்தே புத்தியறிய வருகாலத்தில்
தந்தைசொலுங் கட்டளையால் தனதுகன்மந் தீர்பொருட்டால்

---

நகுல கிரியதனில் வந்து கடல்நண்ணும் நன்னீர்ச்சுனையாடிக்
குகப்பெருமான் தனைப்பணிந்தந்தக் குதிரைமுகப் பிணிதீர்ந்து.

---

தொடர்ந்து விருத்தம் சிந்து எனப் பாடல்கள் தொடரும்.

---


ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம் (1966. பக்கம் 154) என்னுந் நூலிலிருந்து பெறப்பட்டவை இவை.

**நகுலேஸ்வர மான்மியம்**

நீர்வேலிப் பண்டிதர் ச. சிவப்பிரகாசம் அவர்களாற் சம்ஸ்கிருத மொழியிற் பாடப்பட்டதைச் சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர் தமிழாக்கம் செய்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நகுலேஸ்வரத்தில் பிரதிஷ்டை செய்வதற்குத் தயார் நிலையில் இருக்கும் விக்கிரகங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நகுலேஸ்வரப்
பாலாலயத்தில்
இருக்கும்
மூர்த்திகள்



நகுலேஸ்வர
ஸ்தம்பமண்டபத்தில்
வைத்துப் பூசிக்கப்படும்
சோமஸ்கந்தர்



நகுலேஸ்வரப் பெருமானுக்கு
ஆதீனகர்த்தா ராஜராஜஸ்ரீ
கு.நகுலேஸ்வரக்குருக்கள்
தீபாராதனை செய்ய
திருவாவடுதுறை ஆதீனகுரு
மகா சந்நிதானம்
அவர்கள் வழிபடும் காட்சி
(26.08.2003)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# நகுலேஸ்வரர்
# விநோத விசித்திரக் கவிப் பூங்கொத்து

**வருத்தலைவிளான் க. மயில்வாகனப் புலவர்.**

நகுலைப் பரமசிவ நாயகனே யாதி
தருமிப் பதினைந்திற் றானே - மிகுபெரிய
வைந்தாறு பன்னிரண்டு மப்பாற் பதினைந்தும்
வந்தாற லென்றோ வழுத்து.

இப்பாடலின் முதலாம் அடியிலுள்ள ஐந்தாம் ஆறாம் பன்னிரண்டாம் பதினைந்தாம் எழுத்துக்கள் முறையே சேர்ந்து நிற்கப் பரகதி என்றாகும். இப்படியே விசித்திரமாகச் சரக்குகளின் பெயர்கள், பக்கணப் (பணியாரப்) பெயர்கள், இராசிப் பெயர்கள் தோன்றப் பாடியது, எழுத்துக்களை எண்களாக மறைத்துப் பாடியது, நடுவெழுத்தலங்காரம், எழுத்து வருத்தநம், மாலைமாற்று, வினாவுத்தரம், காதைகரப்பு, ஒற்றுப்பெயர்த்தல், மாத்திரை வருத்தநம், கோமூத்திரி, நாகபாத பந்தம், உத்தரம், நான்காரச் சக்கர பந்தம், இரட்டை நாகபந்தம், வேலாயுத பந்தம், அட்டதள பதும பந்தம், பதும பந்தம், இரதபந்தம், முரசபந்தம், முதலான விநோதமான விசித்திரச் சொல்லலங்காரம் அமையப் பாடுவது.

---

1966இல் வெளியாய ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியத்திலிருந்து பெறப்பட்டது. பக்கம் : 282 - 289.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழமண்டல சதகம்

**மட்டுவில் ம.க. வேற்பிள்ளை**

நகுலதீர்த் தம்பரவை சங்கமித் திடுதலா
　　னாடுசா கரசங்கம
நாமமுறு மாகசிவ ராத்திரியி னாடிநொடி
　　நாட்கட னுஞுற்றிநணுகி
நகுலேச னகுலேசு வரியைநனி தரிசித்து
　　நான்குயா மமும்வணங்கி
நகர்வல முறீஇச்செய தலங்கள்பிற பேணிமறு
　　நாட்காலை தனினுமூழ்கி
நகுலேச னடியன்னை யடியொடு பணிந்தெழீஇ
　　நற்றவரொ டறுகடிகையு
ணன்குபா ரணமுந் நவிற்றியெற் றுயில்செயார்
　　நாவன்மையும் பெறுவர்நாயேன்
நகுலேச னாயினேன் செய்பரி சறிந்திலேன்
　　சாந்தநா யகிசமேத
சந்த்ரமௌ லீசனே யைந்தொழில் விலாசனே
　　சந்த்ரபுர தலவாசனே.

---

சென்னை வித்தியானுபாலனயந்திர சாலையில் 1923 ஆவணியில் பதிவு பெற்றது. ஈழமண்டலத்து விஷேசங்களுடன் நகுலாசலம், நகுலதீர்த்தம், நகுலேசுவர சிவக்கரம், நகுலேசுவரி சக்தி சக்கரம், மாருதப்புரவீகவல்லி என்னுந் தலைப்புக்களிலும் பன்னிரண்டு பாடல்கள் நகுலேசுவரத்தினை தெய்வீகத் தன்மையை உணர்த்துவனவாய்ப் பாடப்பட்டுள்ளன. முழுமையான நூல் நகுலேசுவரம் பற்றியதன்று. ஒருபகுதி நகுலேசுவரம் பற்றியது.

நூலை உதவியவர் : திரு. கா. சிவபாலன் - துர்க்காபுரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கை பகுதி

# கீரிமலையினிலே

கவிஞர் வி. கந்தவனம்

கீரி மலையினிலே
நலந்தருங் கேணி யருகினிலே
மாரி மழையதனால்
மலர்ந்தெழும் மண்ணினைப் போலவுள்ளம்

பூரித்து நிற்கையிலே
நினைவுகள் பூத்துக் குலுங்கையிலே
தூரத் தொடர்ந்து சென்றேன்
மெள்ளமெள்ளச் சூழல்கடந்து நின்றேன்

நீரினில் மூழ்கியொரு
முனிவர்தங் கீரிமுகக் கோலம்
தீர மகிழ்ந்துசிவன்
கோயிலைச் சேர்ந்து வணங்குதல்போல்

இராம பிரான் கணையால்
இழந்துகை இன்றிநின் றேங்குகையில்
இராவணன் வீணையினைக்
கவர்ந்துசித் ராங்கதன் மீட்பதுபோல்

என்று பாடல் தொடர்கின்றது.

---

யாழ். இலக்கியவட்ட வெளியீடு. 1969. நூலின் ஒருபகுதி கீரிமலைபற்றிப் பேசுகின்றது.
நூலை உதவியவர்: திரு. சி. சதாசிவம், திருநெல்வேலி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# நகுலேஸ்வரர் திருப்பதிகம்

இலக்கணவித்தகர்
**பண்டிதர் இ. நமசிவாயதேசிகர்**

## நூல்

பன்னிருசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்

சீர்பெறும் தென்பொதிய மலையிருந் தருள்செயும்
தெய்வமுனி தந்ததமிழும்
தேவாதி தேவனொரு வன்னவன் சிவனெனச்
செப்பிடும் சைவநெறியும்
ஊர்தொறும் பண்டையி லொன்றாகி வளர்தலி
னோங்குயாழ்ப் பாணதேயத்
துத்தரத் தோமென்ன ஒலிசெயுங் கடல்மருங்
குற்றநகு லாசத்தில்
ஆர்வமோ டாடுபவர் அகவுடற் பிணியெலாம்
அகல்விக்கு மருவியின்பால்
அடிதொழும் அன்பருக் கவரவர் நிலையறிந்
தருளவுமை அம்மையோடும்
சேர்புகோ யில்கொண்ட தெய்வமே எமதுவினை
தீரநீ யருளவேண்டும்
திங்களணி செஞ்சடில மங்கையுமை பங்கிலுறை
தேவநகு லேசுவரனே.

---

முதற்பதிப்பு: 1988 யூன் 29 திருமதி விமல இந்திரா சின்னத்துரை B.A.
பதிகம்: சிறு நூல்வகையைச் சார்ந்தது. நான்கடி முதல் எட்டடி வரையிலுள்ள வெண்பாவை முன்வைத்து ஆசிரியத்துறை ஆசிரிய விருத்தம் கலிவிருத்தம் ஆகிய செய்யுட்களால் பத்துப்பாட்டுக்களாலாயினும், இருபது பாட்டுக்களாலாயினும் பாடுவது - கலைக்களஞ்சியம் தொகுதி : 6 பன்னிருபாட்டியல் இனவியல் : 197.
இப்பதிகம் ஆசிரிய விருத்தப்பாக்கள் பத்துக்கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# நகுலேசர் திருவந்தாதி

இலக்கணவித்தகர்,
**பண்டிதர் இ. நமசிவாயதேசிகர்**

### நூல்

பூவா ரடிநகு லானன் போற்றிப் புகழ்ந்துநித
மோவா தொழுகு மருவிநீ ராடி யுழைத்திடலு
மாவா வெனவரு ளான்முக மாற்று மவனிருக்கப்
போவா ரெவர்பிற தெய்வத்தை நாடிப் புறம்புறவே.

புறந்தருந் தன்கழல் போற்றுகின் றாரைப் பொருவரிய
அறந்தரு மர்த்தத் தொடுகல்வி யின்ப மளித்தருளும்
இறந்தருந் தீநர கெய்தாமை நல்கு மிமையவட்கோர்
புறந்தருஞ் சீர்நகு லாசலம் மேவிய புண்ணியனே.

புண்ணிய முன்னென்ன செய்தன மோவிப் புவிபுரக்க
நண்ணிய தூயநற் றீர்த்தம தாடி நகுலமலை
யண்ணிய வண்ணலைத் தன்னிடம் மேவிய அம்மையொடும்
பண்ணிய னற்றமிழாற்றுதி பாடிப் பணிவதற்கே.

---

முதற்பதிப்பு: 1990 யூன் இலக்கண வித்தகர் மாணவர் வெளியீடு.
அந்தாதித்தொகை: (புலவர்களால் தாங்கள்) விரும்பிய பொருள்களின் மேல் வெண்பாவாயினும் கலித்துறையாயினும் (அந்தாதித் தொடையின் தன்மையோடு) அமையப்பாடப்படுவது அந்தாதித் தொகையாம் என்பது. அந்தத்தால் அமைந்த ஆதியை உடையது என்னும் பொருளது. அதாவது தன்கண் உள்ள செய்யுட்களுள் முன் உள்ள செய்யுளின் அந்தத்தால் அமைந்த ஆதியை அடுத்துள்ள செய்யுள் பெற்று வருதலை உடையது என்பது. அந்தாதி என்னாமல் அந்தாதித் தொகை என்றது அது, பெரும்பான்மையும் நூறு செய்யுளாற் பாடப்பெறும் என்பதூம், சிறுபான்மை முப்பது முதலிய செய்யுட்களாலும் பாடப்பெறும் என்பதூஉம் அறிவித்தற்காம்.
பன்னிரு பாட்டியல், இனவியல் 212, பக்கம் 139, 140.
இத்திருவந்தாதி நூறு கட்டளைக் கலித்துறைகளினாலாயது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# நகுலாம்பிகை சமேத நகுலேஸ்வரப் பெருமான்மீது பாடிய பக்திரசக் கீர்த்தனைகள்.

**விழிசைச்சிவம்.**

இராகம்: சிந்துபைரவி தாளம்: ரூபகம்

பல்லவி

நகுல கிரிக்குநாம் நேராய் நம்பனைக்
காணப் போவோம் எல்லாம் வாருங்கள்.
நேராய்ச் சீராய்- (நகுல)

அநுபல்லவி

பிறந்து வளர்ந் தென்ன பயன்
பணிந்திடும் பரன்பதம் - (நகுல)
உண்டு உடுத்து வாழ்ந் தோம்
ஊமர்களா கத்திரிந்தோம் - (நகுல)
அன்புடன் அடியர் புகழ்ந்து மகிழ்ந்து
இன்புடன் தினம் இறைஞ்சி ஏத்தும்- (நகுல)

**சரணம்**

நகுலமுனி வரும் நன்முசு குந்தனும்
நளமகா ராசனும் நல்லவில் விசயனும்
தொழுதிட வந்தனர். துயரெலாந் தீர்ந்தனர்
பழுதிலை இப்பதிப் பெருமை சொலப்போமோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாருதப் பிரவல்லி வந்தாள்
　　மாமுகர் தன்னையே தீர்த்தாள்
மன்னனாம் இராமனும் வந்து
　　மாசெலாம் நீக்கியே சென்றான்
சோருத லின்றியே நீவிர்
　　தொழுதுமே நன்மை பெறுவீர் - (நகுல)

---

முதற் பதிப்பு: 1988. ஆக்கம்: விழிசிட்டி செ. சிவசுப்பிரமணியம். இந்நூலில் இருபது கீர்த்தனைகள் உள. முகவுரையில் நகுலேசுரர்துதி, நகுலாம்பிகைதுதி என்பன காணப்படுகின்றன. கீரிமலைச் சிவன்கோயில் வரலாறு அநுபந்தமாகச் சேர்க்கப்பட்டுள்ளது. 1999இல் வெளியாய இறைமணிமாலை என்னும் நூலிலும் மீள்பதிப்பாகியுளது.

உ
சிவமயம்

## நகுலாசல புராணம்

மாதகல் சு. ஏரம்பையர்

பகுதியும் தகுதியும் பகலுணர்த்திடும்
விகுதியும் பெற்றிடை விளங்கி ரட்டியால்
நகுலனைப் பணியவர் நண்ணு மீறதாம்
புகுமுதல் பெற்றடி பொருந்தி வாழ்வரே.

ஐந்துறை நிகமந் தம்பின்
　　அமைந்திடும் முல்லை யக்கம்
நொந்திடும் இடைபொ றைச்சீர்
　　நுதலினோ டழகு பெற்று
பைந்தொடி சோழ ராசன்
　　பாவையும் உருவம் மாறி
முந்திவந் தெழுந்தான் நீரின்
　　மும்மடி யழகு பெற்றே.

---

இப்பாடல்கள் 1996இல் வெளியாய ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியத்திலிருந்து பெறப்பட்டவை. பக்கம் : 266. நூல் அச்சாகியதா என்பது தெரியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# நகுலேஸ்வரர் நான்மணிமாலை

பண்டிதர் சி. அப்புத்துரை

## நேரிசை வெண்பா

பூவார் நகுலகிரிப் பூம்புனலுள் ஆடுநர்க்குத்
தேவாம் நகுலேசர் தெய்வீகம் - ஓவாதே
சித்திக்கும் சீர்பெருக்கும் செவ்விமிகு வாழ்வுதரும்
புத்தி பெருகிவரும் போற்று.

## கட்டளைக்கலித்துறை

போற்றி நகுலேஸ் வரர்புகழ் நாளும் புகன்று நிற்போர்
ஏற்ற முடைத்தாம் எழின்மிகு வாழ்வினி லின்புளராய்க்
கூற்றுக் குறுகினுங் கோதில் குறிக்கோட் பிடிவழுவார்
மாற்ற மிலாவகை மன்றுளார் பாதம் மருவுவரே.

## அகவல்

மருவுமா சகல மாவை முருகன்
திருமலி தூய தீர்த்தத் தாங்கண்
நகுலே சர்உறை நவமணிக் கோயில்
தகுசார் படைந்து தயாவேண் டிடுக
பெருகு மன்புப் பிணிப்புட னாகிக்
கருணை யுளத்தொடு காதலித் தேற்பான்
நகுல முனிமுகம் நரர்முக மாகிய
திருதேர்ந் திலையேல் தேருக நிசமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஆசிரிய விருத்தம்

நிசமன்னை பார்வதியும் நிமலன் தானும்
நிலைதமதென் றீழத்து வடபாற் றங்கி
அசல்புனித தீர்த்தமொன்றை வருவித் தாங்கே
அதனையே கண்டகியென் றழைத்தா ரென்றும்
பிசகுமுக நகுலமுனி பிரியா தாடிப்
பெரிதுவழி பாடாற்றிப் பேறு பெற்ற
வசமான தெய்வநிலை மற்றீ தென்றும்
வழுத்திடுக வரம்பலவும் வாய்க்குந் தானே.

---

2002இல் நூல் வெளியாகியது. நான்மணிமாலை.

வெண்பா கலித்துறை அகவல் விருத்தம்
நண்பாய் வருவது நான்மணி மாலை.

என்பது பன்னிரு பாட்டியல்தரும் சூத்திரப்பா. வெண்பாவும் கலித்துறையும் ஆசிரியப்பாவும் விருத்தமும் ஒன்றுடன் ஒன்றற் கியைபை உண்டாக்கும் அந்தாதித் தொடையோடு நாற்பது வருவது நான்மணிமாலை.
பன்னிரு பாட்டியல் இனவியல் 153. பக்கம் 88.

உ
சிவமயம்

## கீரிமலை வரலாறு

**சிவத்திரு பொ. கனகராஜா**

இலங்கை ஓர் புண்ணிய பூமி, அதன் இடைக்காலம், தற்காலம், கீரிமலையின் பூர்விக வரலாறு, இருக்கும் மடாலயங்களின் விபரம்: ஆலயங்கள் என்று விபரங்கள் தரப்பட்டுள்ளன. நூல் வெளிவருவதற்கு ஊக்குவிப்பளித்தோர் சிவஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்கள், சிவத்திரு ஐயம்பிள்ளைக் குருக்கள், பண்டிதர் சைவப்புலவர் சிவத்திரு நவரத்தினக் குருக்கள் என்றும் காட்டப்பட்டுள்ளது.

---

1952இல் நூல் வெளியாகியது. 16 பக்கங்களையுடையது. நூலை உதவியவர் நீராவியடி அ. பஞ்சாட்சர ஐயர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# நகுலேசர் ஊஞ்சல்

சுன்னாகம் அ. குமாரசாமிப் புலவர்.

## காப்பு

சீர்கொண்ட யாழ்ப்பாண தேசந் தன்னிற்
சிறப்பமருங் கீரிமலைச் சாரல் வாய்ந்து
நீர்கொண்ட சாகரசங் கமமே யான
நின்மலபுண் ணியதீர்த்தக் கரையின் மேவும்
பேர்கொண்ட நகுலேசப் பெருமான் மீது
பெட்புறுசெந் தமிழ்க்கவிதை யூஞ்சல் பாடக்
கார்கொண்ட யானைமுக முடைய முன்னோன்
கமலமல ரடியிணைகள் காப்ப தாமே 1

## நூல்

செங்கனக மேருவெனத் தூண்க ணாட்டிச்
செய்யமர கதப்புதிய விட்ட மாட்டிப்
பங்கமிலா முத்துமணிக் கயிறு பூட்டிப்
பத்தரைமாற் றுயர்தங்கப் பலகை கூட்டி
இங்குளசித் திரமெல்லாம் விளங்கத் தீட்டி
யியற்றிடுமூஞ் சற்பீடத் தினிது வைகி
நங்கைநகு லாம்பிகையோர் பாங்கர் மேவ
நகுலகிரி நாயகரே யாடீ ரூஞ்சல் 2

சூரியனுஞ் சந்திரனுங் கவிகை தாங்கச்
சுந்தரமா ருதன்கரத்திற் கவரி யோங்க
வாரிதியின் கோமகன்சாந் தாற்றி வாங்க
மகபதிகைத் தலத்தால வட்டந் தூங்கக்
காருலவு மொலியெனவாச் சியங்க ளோங்கக்
காசினியிற் பிணிவறுமை யாவு நீங்க
நாரிநகு லாம்பிகையோர் பாங்கர் மேவ
நகுலகிரி நாயகரே யாடீ ரூஞ்சல் 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தகமா மறையாளர் மறைக ணோட
மெய்யடியா ரரகரவென் றருகு கூடக்
கொத்துலவு மலர்க்குழலார் நடன மாடக்
குலவுபல வாச்சியங்க ளொலியி னீடப்
பத்தர்கள்செந் தமிழ்வேதம் பண்ணிற் பாடப்
பாருலகிற் றுன்பமெலாம் நீங்கியோட
நத்தமருஞ் சாகரசங் கமநீர் மேவும்
நகுலகிரி நாயகரே யாடீ ரூஞ்சல் 4

சங்குதுடி பேரிமுத லியங்க ளார்ப்பச்
சகலவுயிர்த் தொகுதிகளும் மகிழ்ச்சி கூர்ப்பப்
புங்கவர்கண் மலர்மாரி யெங்குந் தூர்ப்பப்
புத்திசைசேர் யாழினொலி சித்த மீர்ப்ப
அங்கமெலா மடியர்குழாம் புளகம் போர்ப்ப
அரகரவென் றன்பினொடு மங்கை கூப்பி
நங்கணகு லாம்பிகையோர் பாங்கர் மேவ
நகுலகிரி நாயகரே யாடீ ரூஞ்சல் 5

வாரணசங் கமதீர்த்தத் தன்பி னோடும்
வந்துபடி வோர்நிதமுந் தெரிசித் தேத்திப்
பூரணமா யிட்டசித்தி யாவு மெய்தும்
பொருட்டாக வாகமங்கள் பலவு நாடிச்
சீரணவு சிற்பமுறை செய்யப் பெற்ற
திருப்பணிசேர் திருக்கோயில் சிறந்து மேவி
நாரணனு மாரணனும் பாங்கி னேத்த
நகுலகிரி நாயகரே யாடீ ரூஞ்சல் 6

இச்சகத்திற் றனைநினைவோ ரிடரை நீக்கு
மேகதந்த விநாயகமுக் கண்ண னோடு
பச்சைமயில் வாகனனும் பாங்கர் மேவப்
பண்ணவராம் விண்ணவர்பல் லாண்டு சொல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சுதனுஞ் செங்கமலத தயனும் வாழ்த்த
வம்பொன்மய வம்பலத்தி னருளே பூண்டு
நச்சரவக் கச்சசைத்து நடன மாடும்
நகுலகிரி நாயகரே யாடீ ரூஞ்சல் 7

நெஞ்சமொழி காயமிவை கடந்து நின்ற
நின்மலசின் மயவடிவே யெனினும் பாச
புஞ்சமுறு மாருயிருக் கிரங்கி நாளும்
புத்தி முத்தி கொடுத்தருளும் பொருட்ட தாக
எஞ்சலிலாத் திருக்கோயிற் பதிட்டை செய்த
இலிங்கமெனுந் திருமேனி யினிது கொண்டு
நஞ்சமுது கொண்டவரே யாடீ ரூஞ்சல்
நகுலகிரி நாயகரே யாடீ ரூஞ்சல் 8

யானையுரி யுடையாரே யாடீ ரூஞ்சல்
எப்பொருளு முடையாரே யாடீ ரூஞ்சல்
மானமருங் கரத்தாரே யாடீ ரூஞ்சல்
மந்திரவக் கரத்தாரே யாடீ ரூஞ்சல்
வானமதிக் கண்ணியரே யாடீ ரூஞ்சல்
வழுத்துபவர்க் கண்ணியரே யாடீரூஞ்சல்
ஞானபரி பூரணரே யாடீ ரூஞ்சல்
நகுலகிரி நாயகரே யாடீ ரூஞ்சல். 9

## வாழி

சந்தமறை யாகமசாத் திரங்கள் வாழி
சாருமறை யாளரொடு பின்னோர் வாழி
சுந்தரமா முகில்வாழி செங்கோல் வாழி
தூயமட மகளிர்பதி விரதம் வாழி
சிந்தைமகிழ் பூசைவிழ வோடு கோயிற்
றிருப்பணிக்குப் பொருளுதவி செய்வோர் வாழி
நந்தநகு லாம்பிகையா மம்மை யோடு
நகுலகிரி நாயகரே வாழி வாழி 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எச்சரீக்கை

கங்காநதி முடியாயருட் கண்ணாயெச் சரீக்கை
காலன்புவி விழவேயுதை காலாவெச் சரீக்கை
பங்கேருகன் முதலோர்தொழும் பாதாவெச் சரீக்கை
பாலார்விடை மேலாய்வரு பகவாவெச் சரீக்கை

தேவாசுரர் முதலோர்க்கதி தேவாவெச் சரீக்கை
தேனார்மொழி மானாளுமை தேவேயெச் சரீக்கை
மாவாழ்மல ரணிநேர்பணி வைத்தாயெச் சரீக்கை
வானோர்சிர மேலேயுறு மணியேயெச் சரீக்கை

பற்றார்புர மெரியூட்டிய பகவாவெச் சரீக்கை
பாங்கார்திசை யுடையாய்மழுப் படையாயெச் சரீக்கை
கற்றார்புக ழொளியேயருட் கடலேயெச் சரீக்கை
காரார்குழ னகுலாம்பிகை கணவாவெச் சரீக்கை

திருநீறணி யுருமேவிய தேசாவெச் சரீக்கை
சிரமார்தரு மறைமேலுறு தெளிவேயெச் சரீக்கை
கருநீறுற வடியார்க்கருள் காண்பாயெச் சரீக்கை
கலையாமறி மழுவோடுறை கரனேயெச் சரீக்கை

பாராயண வேதாகம பதியேயெச் சரீக்கை
பரிவோடடி பணிவார்க்கருள் பரனேயெச் சரீக்கை
நாராயண வீராசுக நாதாவெச் சரீக்கை
நகுலாசல நகுலேசுர நாமாவெச் சரீக்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பராக்கு

சித்திதரு மைந்துமுகத் தேவே பராக்கு
செய்யுதிரு நீறுபுனை தேசா பராக்கு
சத்தியுமை பங்குகொளுஞ் சாமீ பராக்கு
தாதுசொரி கொன்றைமலர்த் தாமா பராக்கு

ஆனைமுக ராறுமுகர்க் கத்தா பராக்கு
ஆலவிட முண்டவரு ளாளா பராக்கு
வானிலுறை தேவர்பெரு மானே பராக்கு
வானநதி சூடுமுடி வள்ளால் பராக்கு

நித்தியமு முயிர்க்கருள்செய் நிமலா பராக்கு
நிலவுபுனை செஞ்சடில நிதியே பராக்கு
ஆத்தியுரி போர்த்தருளு மமலா பராக்கு
அரியொடய னாடரிய வரசே பராக்கு

அன்றுபுர மூன்றெரித்த வாதீ பராக்கு
அலரிமதி கனல்கொள்விழி யாளா பராக்கு
கொன்றைமலர் மாலைபுனை கோவே பராக்கு
கோலமணி மன்றிலுறுங் கத்தா பராக்கு

எங்குநிறை வுற்றபர மேசா பராக்கு
எட்டுவடி வாயுமுள வேகா பராக்கு
நங்கைகுலாம் பிகைக்கு நாதா பராக்கு
நகுலகிரி வாசமுறு நம்பா பராக்கு

குறிப்பு : இதற்கு முன்பு பாடப்பட்டதொரு ஊஞ்சற் பாட்டு இருந்து மறைந்துள-தென்ற கருத்தும் நிலவுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# நகுலேச்சுவர தசகம்

சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர்

### வெண்பா

கங்கையொடு திங்களராக் காட்டுஞ் சடைமுடியார்
மங்கைநகு லாம்பிகையை வைத்தவிடப் - பங்குடையார்
கீரிமலை வாசர் கிளருநகு லேசரடி
வாரிசத்திற் கன்புசெய்கு வாம் 1

### கட்டளைக் கலித்துறை

சங்கம சாகர புண்ணிய தீர்த்தஞ் சமீபமுறுந்
துங்க மிகுந்துள தெத்தல யோவிந்தத் தொல்புவியிற்
பங்கம தின்னகு லாம்பிகை யாம்பெயரப் பாவையுமை
தங்கிய மாநகு லேசர் வசிக்குந் தலமல்லதே 2

### வெண்பா

சோழன் மகட்கருளுந் துங்கநகு லேச்சுரம்போ
லீழத்தில் வேறுதல மில்லையில்லை - பாழுடலைக்
காத்துநிதி தேடுங் கயவர்களே நும்பொருளீந்
தேத்திடுமி னேத்திடுமி னின்று 3

### கட்டளைக் கலித்துறை

சாகர சங்கம புண்ணிய தீர்த்திகை சத்திசிவ
மாகிய ரூபா மதற்கய லோர்சிவ னாலயமும்
நாக வளங்களு மாக விளங்கிடி னல்லதலம்
மாகதி காட்டிடு முக்கிய கேத்திர மற்றதுவே 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கட்டளைக் கலிப்பா

கீரி மாமலை வாரிதி யாடியே
கீரிச னாநகு லேசனை நாடியே
சேரு மன்பொடு சிந்தனை செய்துமேற்
றிசைகொ ளுக்கிர சோழரா சன்மகள்
மாரு தப்பிர வல்லியென் பேரினாள்
வாவு வெம்பரி மாமுக மோடுநோய்
தீர நீங்கின ளித்தலத் தேயெனிற்
செப்பி லங்கையி லொப்பிதற் கில்லையே 5

### வெண்பா

செல்வ நிலையென்று தேடுகின்ற மாந்தர்காள்
செல்வ நிலையாது சில்பொழுதும் - அல்லதூஉம்
காயம் நிலையுளதோ காட்டுநகு லேச்சுரத்திற்
கீயும் பொருளை யினிது 6

### விருத்தம்

தேவர்தொழுங் கீரிமலைச் சிவன்கோயிற்
றிருப்பணியைச் செய்விப் போரும்
ஆவலொடும் பலபொருள்கள ளித்ததன்சீர்
வளர்த்திடற்கே யகங்கொ டோரும்
பூவனிதை பாவனிதை போற்றுநகு
லாம்பிகையைப் புணரு மெங்கோன்
சேவடியாம் பெருவாழ்விற் றிளைத்துமகிழ்ந்
திடுவரிது திண்ணந் தானே 7

### வெண்பா

அன்பர்க் கினிதருளு மாதிநகு லேசபிரான்
செம்பொற் கமலமலர்ச் சேவடியே யின்பப்
புணையா குவதன்றிப் பூவிலுயிர்க் குற்ற
துணையாகச் சொல்வதெது சொல். 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### விருத்தம்

திருப்பெறுமா மேருவரைச் சிகர மூன்றிற்
சேருமொரு சிகரமதாய்த் திகழு மீழத்
துருப்பெறுமா முகமெனும்யாழ்ப் பாணந் தன்னில்
உத்தரத்திற் கீரிமலைச் சாரல் தன்னில்
விருப்பமரும் நகுலேச ரருளே கொண்டு
மேவியுறைந் திடுகோயில் விளங்க வாய்ந்த
திருப்பணிகள் செய்பவருஞ் செய்விப் போருந்
திரவியங்க ளீவோருஞ் சிறந்து வாழி. 9

### வெண்பா

அன்று நகுலமுனி யாதியர்க்குச் செய்கருணை
இன்று மறப்பினரு ளெங்ஙனோ - வன்றோலின்
வாசா வுமைநேசா வாரிமலை கீரிமலை
வாசா நகுலோ மற்று. 10

---

**நகுலகிரிப்புராணம்**

அம்பிகை கரத்தின் முன்னா ளெழுந்துநீ டலைகள் வீசுங்
கம்பைநன் னதிபோ லிந்தக் கங்கையும் புனிதஞ் சார்ந்து
பம்பிய கடல்சூழ் கின்ற பார்மிசை நிலையாய் விண்டின்
இம்பருந் தொழநா டோறு மினிதுறப் பெருகு மன்றே.

*தீர்த்தவிசேடமுரைத்த படலம், பாடல் இல. 42.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணைப்பு : 1

2003.08.11இல் தெல்லிப்பழை சரவணமுத்து ஸ்ரீசோமாஸ்கந்தர் நினைவாக வெளியாய இந்த நூலின் முதலாம் பதிப்பில் சமாதிக் கோயில்கள் என்னுங் கட்டுரையின் இறுதியில் குறிப்பு என்று காட்டப்பட்ட கருத்துச் சார்பாகச் சில செய்திகள் கிடைத்துள்ளன.

அவற்றை இங்கு காண்போம்.

1. குழந்தைவேற்சுவாமி சமாதி கீரிமலை மாரியம்மன் கோயிலுக்கு முன்புறம் சிறிதளவு தென் கிழக்காக உள்ளதென்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கு அண்மையிலுள்ளவை ஒன்று குழந்தைவேற் சுவாமியின் குரு பரமகுரு சுவாமியினுடையது என்பர். மற்றையது மகாகவி பாரதியாரின் யாழ்ப்பாணத்துக் குரு அருளம்பல வனாருடையதென்பர்.

2. அந்தியேட்டி மடத்தின் கிழக்கே வீரசைவர்களின் மயானம் எனப்படும் தென்னந்தோட்டப் பாங்கான பிரதேசத்தில் உள்ளவை:

    i. அம்பனை நீலகண்டருடையது.
    ii. அம்பனை நீலகண்டர் மகன் இராசலிங்கத்துடையது.
    iii. கீரிமலை சிவஸ்ரீ ச. தற்பரானந்தக் குருக்கள் நினைவானது.
    iv. கீரிமலை நல்லையர் நினைவானது.

3. சேந்தாங்குளம் நோக்கிய வீதியில் சந்தியிலிருந்து சுமார் நூறு மீற்றர் மேற்கே தெருவின் வடக்கிலுள்ளது.

இது கோப்பாய்க் கோமான் வன்னியசிங்கத்தின் உறவினர் சுப்பிரமணிய சுவாமியினுடையது என்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NAKULESWARAM

**Dr. R. Vigneswaran**

Sircar (1971) "...make prominent mention of the Gangasagar a tirtha ... as late as the first half of the eighteenth century, considerable parts of the old city existed and people flocked to the thirtha with a desire to touch the feet of Pitamaha (Brahman to have a bath in the waters of the Mandakini (Ganga on her way to Patala) and to worship the images of Madhava (Visnu) named after an ancient king of that name, Amarasankara (Siva), Kapila ( founder of the Sankhya system of Indian phiosophy mythologically represented as a sage indirectly responsible for the digging of the beds of the oceans by the sons of Sagara as well as for the descent of the Ganga on the earth and regarded as an Avatara of Visnu) Skanda (Karrtikeya) and Hari (Vishnu.)

The city of Gangasagara seems to have been encroached upon by the sea and affected by the occasional changes in the surface of the land caused by the silting up of one or the other of the mouths of the Ganges and by the creation of new mouths ... a mere sandbank about a mile in length and about a quarter mile broad, of crescent form with the side sea opening in Front and the back covered by dense jungle. At one corner, stands the solitary temple of the celebrated sannyasi, Cupil Muni (kapilamuni)." (1)

"In 1842 A.D., the remnants of the ancient city were washed away." (2)

---

1) Sircar, D.C., Geography of Ancient and Medieval India, M.B., pp.222,3,1960,1971
2) " " p.223.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Shifting the scene to the Jaffna peninsula of the rotating, sliding Lanka, presently at rest. In the chequered history of Lanka, the Jaffna Miocene limestone of 7 -26 my ago figures importantly in two main areas, namely in the North and North Western regions and, in the South Eastern region of Minihagalkanda distal to the fracture zone of Lanka from Bharatavarsa 2.2 —20 my ago. It has provided a veritable sponge for survival of fauna and flora in an otherwise arid region. The numerous Solution chambers in the limestone formed natural caves in the land barely thirty feet above mean sea level. Two of them, in tile proximity of Kankesanturai, have been named Periyamandapam and Sinnamandapam. (1)

Issuing waters from these finished as submarine springs unnoticed.

A few however, left telltale trails on the seashore acting as 'markers'. Arumugam (1981 ) recalls,

" the revelation was made be Geologist Sirimanna when he was Studying ground water conditions and behaviour in the entire Jaffna penisula.

He showed me definite evidence of ground water escape underground to sea at this place. Possibly this is how it has become a theertha sthalam." (2)

This relates to the northwest coast of Jaffna in the proximity of Thiruadinilayam (Visnupadam) Mathagal and, ancient Paralai Vinayakar temple near the old seaport of Sambuthurai

Another such 'marker' provided an ancient sage Nakulamuni a haven for meditating on Siva, at a promontory of a most prominent area on the northern coast, barely one and a half kilometres from Keerimalai on the beach towards Kankesanturai. In this cave flowed- fresh water. None noticed that Nakulamuni faced the rising and setting suns with equal facility and, had the summer and winter solstices directly overhead, when they occurred.

---

1) Ceylon Traveller Hand book, Studio'Times,p.248,1974.

2) Arumugam Ancient HinduTemples of Sri Lanka.pp. 10- 11, 1980,1982.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

There is a legend in tile Mahabharata of Jamathakiri (Jamadagni) incurring the wrath of sage Pitukumunivar who caused him to have a facial change to that of a mongoose (keeri). but who however directed Nakuli (Jamathakiri) to first go south to Vedaranyam (in India) and, across the sea south-west to the northwestern coast of Jaffan to the cave in reference, known thereafter as Nakulagiri's cave and, acquired the, name Nakuleswaram due to the swayambulingam which had appeared. Nakuli recovered his normal facies and, performed lifelong penances. Dating of Naguleswaram using the solitary 'marker' of a spring and a cave would prove to be diffcult

**Location**

"yalpanaththil vada pahaththil **sagara sangama tirthakkarayil** nakulakirikul metkupakkaththil, thetkil ooruhinra suttha neerum, vadakkilulla uppu neerum kalanthukondu, kilakku nokkiya sivaroopamum sakthiroopamum aka irukkinra Iyalpinale, **'ganga samuthra sangamam"** enrum "kanda theertham" enrum alaikkapadum (1)

Briefly, it is located at the northern Jaffna confluence of sagara sangama thirtha waters on the west, with fresh water from the south and, salt water from the north of Nakulagiri, - taking the forms of Siva and Sakthi to flow east (to the Ganges). It is Candatirtha.

The quotations in toto are unique in view of the chequered history of Lanka. It conveys perpetuity and awareness of the legends of Sagara, Pakirathan and, the Ganges in the history of the oldest Sivan temple in the Jaffna peninsula. The fresh water spring is known as Patala Ganga

---

(1) Holy Lanka's HinduTemples, Ministry of Cultural Affairs,p.89, 1982



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Puranic references

### Garuda Purana-

"..Fifth was Kapila who reduced 60000 sons of Sagara to ashes at Patala (1)

Nakuli's cave is a temple location.

" Myth says Sagara had 60,000 sons by one of his wives... followed Sagara's sacrifical horse down to the lower regions and all except four were burnt up by Kapila (who was Visnu) " (2)

Kurma Purna-

" 12. Nakuliswara Tirtha - The Lord Nakuliswara the glorious deity is present there. fn4. - Nakulisa, founder of the Pasupata sect probably finally settled in Himalayas. Hence his dwelling place came to be regarded as a sacred place. Its exact location is uncertain. " (3)

"fnI. Nakulas are the followers of Nakula or Lakulisa, a semithistorical founder of the sect of Saivism." (4)

**SKanda Purana -**

"Kayavardhana - a birthplace of Nakulisa ($2^{nd}$ century C.E.), $28^{th}$

Incarnation of Siva. Founder of Pasupata. (5)

Skanda Purana - 68 lingas in Kasi.,

" 114-117. Acarya Nakulisawara (Lakuliswara) has come from the holy spot,

Kayarohana (Baroda district in Gujerat)

118. **Amaresa from Gangasagarasangamam** (confluence of the Ganga and the sea.)

---

1) GarudaPurana, AIMT.M.B., p.3, 1968.
2) Pargiter, F.E., Ancient Indian Historical Tradition p.27Ifn.6, 1922.
3) Kurma Purana AIMT, M.B., p.600, 1968
4) Kurma Purana AIMT, M.B., p.600, 1968.
5) Skanda Purana AIMT part.XII, p.2, 1968.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

119 -120. **Bhimeswara from Saptagodavaritirtha.** Lord Bhimesa in front of Nakuliswara

123. **From holy spot Nakuliswara, swayambu in kasi** " (1)

**Narada Purana re Tirthas in various lands**

"42 -44a, Thereafter is the holy centre Somatirtha where sage Nakula worshipped and meditated on Siva and attained a position as the attendant of Siva..." (2)

Padma Purana re sacred places -

"5. Ganga Sagara is also said to be an auspicious sacred place composed of all sacred places. "(3)

Siva Purana (Tamil) re 68 sacred places.

" Ganga sagara sangamaththil amaresanum (4),

at No.5 1, at the confluence of Ganga/sagara i.e., Ganges with the ocean, the linga being Amaresa

**Lankan literary references**

Raghavan (1950) commented,

"On the seaboard is the sacred spring of Keerimalai. Its very name signifies a hill, the hill of Nagula muni who is believed to have lived in a rock recess, the sage who was so shrunken with age and austerities, that the was likened to the Kiri (Mongoose). (5)

Cellaiya (1998) citing Yalpana Vaipava Malai

"Once the temple of Siva was constructed by King Vijaya (Vijayarasa) at that site, Nakulamuni lived in the premises of that temple and performed regular worship. It was on that account that the temples of Tiruttampalesurar and Tiruttarnpalecuvari came to be known as Nakuleswarar and Nakulambikai. " (6)

---

1)Skanda Purana AIMT, part.XI, p.192-199, 1968.
2)Narada Purana AIMT, p.1762, 1968.
3)Padma Purana AIMT, p.96,1968.
4)Siva Maha Purana (Tamil) opus.cit.pp.17-18.,1997.
5)Raghavan, M.D., Tamil Culture in Ceylon, p.51,1950.
6)Cellaiya, Y, in Pathmanathan's Temples of Siva in Sri Lanka p.pp. 185 -6 1998.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

There is no corroboration of this in Britto's translation of Yalpana Vaipava Malai. It states however that,

. "In honour of this muni, who was constantly performing duties ... posterity has changed the names of the temples into..." (1) They were not contemporary.

Kulasabanathan in Tamil Yalpana Vaipava Malai however avers so. (2)

Incorrectly, vide infra

Cellaiya (1998) of Nakuleswaram says,

"no archaeological evidence or contemporary literary sources...

there is reason to believe that the temple had its origin as a centre of the Saiva sect called Nakulesvara Pacupata (m). (3)

Mayilvakana (pulavar) in Yalpana Vaipava Malai (1879),

"Nakulamalai is frequently known by the name of Kirimalai from kiri, which is another word for mongoose." (4)

" and in the north he (Vijayaraja) constructed Thiruthampalai Koyil and Thiruthampalasuvari amman koyil at thiruthampalai, at the foot of Kirimalai (5)

Nakulakiri Puranam of Appasamy Iyer (1900), a sthala puranam states, "Thiruthampaleswaram is its ancient name, but since Nakula Muni received grace, it came to be known as Nakuleswaram. Tirtha is known as **Candaki Tirtha."**

"Sudhama, a sage, was performing ' tapas' and had occasion to vent his wrath on Thurththaran a hunter causing a change of facies to that of a mongoose. Where upon Thurththaran

---

1) Britto,C., Yalpana Vaipava Malai,p.4.,1879, of Mayilvakana Pulavar.
2) Kulasabanathan,C., Yalpana Vaipava Malai (Tamil) p.7,1953.
3) Cellaiya,Opus cit.p. 183.
4) Mayilvakna Pulavar, Opus Cit., p.4,1879.
5) " " p.3.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

sought to ameliorate his condition and, sought relief. Thurththaran was told by Sudhama ' in the southern seas off Vetharaniam lies an island, Lanka. On the north of Lanka, there is a mountain. Perform austerities there and you will recover and attain Moksha

"Thurththaran following that advice bathed in the Gangathirtha and occupied a cave in the proximity. After several years of austerities Thurththaran had a vision of Siva, Parvati and, Muruga riding Nandi. Siva told him you will receive a pleasant face, this mountain will be know as Nakulamalai you will be known by my name as Nakuleswarar. Devi's name shall be Nakulambikai and, this Thirtha shall be Nakulesa Thirtha. Nakulasurar continued life there until he attained Moksha " (1)

Maruthappiravikavalli, whose mother, Kanahanthi, was cursed by a Kinnara woman, was born with the facies of a horse. After performing numerous austerities she was told by Siva to perform Thirtha at Nakulesa Thirtha, where you will recover. " (2)

"Rama, Susankithan Nala Maharaja, Arjuna, Musukunthan Chakravarti were others who performed Thirthas at Nakulesa Thirtha. (3)

Nakuleswara Manmiyam of Erampa Aiyar is barely anteceded by the Puranam of Appasamy by a decade (1910 A.D)

Sudama is the local traditional name of Pitukammunivar and, Thurththaran that of Jamakirti

It is clear that Nakuleswaram, like other temples of the

---

1) AppasarnyK.,Nakulakiri Puranarn (History of Keennialai Sivan Ternple), P.xv, 1980.

2) AppasarnyK.,Nakulakiri Puranarn (History of Keennialai Sivan Ternple), p.1xv.

3) AppasamyK.,Nakulakiri Puranarn (History of Keennialai Sivan Ternple), p.xv.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

times was a rock cave temple occupying a promontory as described earlier. Nakulisa himself, as pertinent from the citations had two namesakes. One, also known as Lakulisa was dated at 200 B.C. - 125 A.D. (1) The other, Acarya Nakuliswara hailed from Gujerat and belonged to the Pasupata sect and belonged to a much later period of time.

Though the Puranic references do not refer to the horse facies the Swayambulingam of Nakuleswaram being Amaresa/Amareswara is substantiated by the Skanda Purana of the Lingams at Kasi (Varanasi, Benares) and, the Siva Purana (Tamil). The Skanda Purana reference in earlier sections regarding the holy lingas of Patala installed by Devas has Amareswara identified as Swayambulingam at Nakuleswaram



1) Cultural Heritage of India, India Culture, Volume 4, p.42., 1937, 1979.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Nakuli's cave, on Northern coast of Jaffna peninsula, 1.5 Kms from Keerimalai towards Kankesanturai. Entrance to cave is on the right on approaching the rockface. Patala Ganga emerges from the right of the cave. Note rock formation on the prom ontory, so Much like a Nakula (mongoose), hence the name Nakulagiri Here, Nakuli saw sunrise, sunset daily and; had the summer and winter solstices overhead when they occurred, and, had a vision of Siva, Parvati Muruga and, Nandi. It was Swayambulingam Nakuleswara/Amaresa/Ameraswara's First location.

Nakuli's cave was a temple.

Source - Early settlements in Jaffna by Professor Ponnambalam Ragupathy, Madras, 1987.



Swayambulingam Nakuliswara


On right is Naguleswara/ Amaresa Amareswara of Patala associated with Somatirtha of Skanda Purana (CandiTirtha, CandakiTirtha )

Photograph by courtesy of Brahmagiri Brahmaguru K.Nakuleswara Kurukkal

Below is Keerimalai - Kankesanturai sector of the Survey Department of Sri Lanka map of Jaffna Peninsula's I : 50000. Arrow indicates entrance to Nakuli's cave, the first location of Swayambu Lingam Naguleswara. Dot at,Sadai Amma Madam, second location and, Dot at Keerimalai third location respectively.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Puranic references 'deny' the existence of a deformity and so does Raghavan. But the oral traditions are repetitive regarding NakulaMuni UkkiraSingan and finally, Marutha piravikavalli. There are none regarding any disciples of Nakulamuni

The emphasis on a Kinnara curse is descriptive of the general traditions regarding the ferocity and appearances of Kinnaras. There is no reason to disbelieve oral traditions. The vision and name Nakuliswara is that of Siva, when possessed of the face of a mongoose.

Two questions have to be answered to understand the intertwining of the histories of Naguleswaram and Keerimalai Sivan Temple. First is, when did NakulaMuni attain moksha? There is no record of it. Second, whatever did happen to the swayambulingam? Thiruthambaleswarar of Keermalai was



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

quite distant from Nakuleswaram. If anything, there would only have been a Madam on top of the limestone rock bearing the cave.

"The interior of it was absolutely dark and extensive, terrifying to a devotee. (1)

The advent of Rama though not so stated in Valmiki's Ramayana would mean that Nakuleswaram is a postrotation temple of Lanka, of at the most, 7000 B.P. The advent of Arjuna and Nala heroes of the Mahabharata would indicate an age earlier than 3102 B.C., when Krishna died and Kali yuga began. Of utmost concern is the complete lack of reference to the whereabouts of the Swayambulingam, so ancient meaning that it belonged to the Kretayuga, since Vishnu had lived in the cave with Nakulamuni, according to one oral tradition. This might have been a reference to sage Kapila (Vishnu).

The Portuguese destroyed Thiruthambaleswarar and, whatever edifice there was on top of Nakulagiri signifying Nakuleswarain, in 162 1.

In 1878, concomitant with the Hindu revival by Arumugam Navalar, funds were raised for a new temple, Keerimalai Sivan temple situated adjacent to the Keerimalai spring, being duly consecrated in 1882. The terraces, being of cadjan were destroyed by fire in 1918. It was once again resurrected and duly consecrated, in 1953.

It is remarkable that,

பொதுசன நூலகம்

1) Oral communication, Sen.iyoth Pulavar Pandithar M.Kumaraswamy, a long standing resident of Kankesanturai, since deceased.

யாழ்ப்பாணம்.
விசேட சேர்க்கைப் பகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" The scene of the Tirukalyanam of Parvati and Parameswara is painted on the front wall of the nirutta mantaparn. The scene depicting Brahma as the officiating priest and Vishnu in the role of performing the kanya tanam is represented here with consummate skill. The churning of the milky ocean by the gods and asuras the spread of alakalam the poison emitted by the serpent Vasuki over the world, Siva as Nilakantan absorbing the poison and retaining it in is throat, the descent of the Ganges from the skies, for the deliverance of humanity, in response to the penance of Bhagiratha are the principal themes depicted with telling effect on the walls of this temple. " (1)

Did 'they' but know that it was the prehistory of Lanka that was being depicted in the scene of the churning of the ocean?

Puranic references indicate that the Ganges came down to redeem the sons of Sagara and, the fumes (Kalakuta/ Halakala) inhaled were not from Vasuki but from the ocean depths.

Sircar had bemoaned the loss of a Tirtha from the east of India but was unaware that Lanka, being a part of that loss was still there, complete with the legend of kapila. Sagara and Sagarasangamatirtlia.(2)

Nakuleswararn still remains 'in situ' as the only coastal rock cave temple still accessible to all who care and dare. There is a continuity of the linga worship to the extent that, Swayambu Amaresar is not where he resided earlier, inside the cave, but on top of it, whence the swayarnbulingarn was moved following encroachment by the sea.

---

1)Cellaya, Y., Nakuleswaram, Temples of Siva oin Sri Lanka, p.191, 1999.
2)Sircar, Opus cit., pp.222-224, 1960, 1971.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Nakuleswara Kurukkal stated, referring to the Swayambulingam,

"To this day lie remains, but adjacent to the Sadaiamma madam, but still on top of the same cave, where lie continues to be worshipped and bestows grace. There is a fresh water spring in the proximity." (1)

(This madam is marked Sadaiamma madam' in the map.)

, The Rock cave temple was Temple I dateable at ca 7000 B.P. at most, because Lanka had come to rest, though the Swayambulingam could have been older still and is undateable using a 'marker-'. It was postrotation since ca 25000 B.P - 16000 B.P There is no Temple 11, since the Lingam is adjacent to the Sadaiamma Madam. The nature of the terrain would not have permitted it, either.

Temple I at Keerimalai wasThiruthampaleswarar, restored by Vijaya. Temple 11 at Keerimalai and Temple III at the same site, following destruction by the Portuguese and fire respectively, are by common assent, referred to as Keerimalai Sivan Temple and Nakuleswaram concurrently and conjointly.

Keerimalai tirtha exists as the bathing ghats. The Keerimalai confluence of waters has also been referred to as Arkonamalai (2) The name has evolved as the Orgalic Gulf of Ptolemy, (Palk strait).

Patala Ganga continues to run as before at Nakuli's cave, to the right of it, presently north and still part of the Ganges as before, **the Confluence of waters being called Canditirtha, Candakatirtha, Somatirtha or Nakulitirtha** We lie in the backwash of the Ganges fan. The waters may be shallow but the currents are strong.

---

1) Nakulaguru felicitation volume, 2000, p.1 of appendix re temple restoration, interview by saiva Pulavar K. Sellathurai with Nakuleswara Kurukkal.

2) Komathinayakam, A., Thiruppukal Thiruththalangal,p.40, 1992.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

It has merited one verse in Thiruppukal

Barhmaguru Nakuliswara Kurukkal (2001 ) stated,

"The swayanibulingam has since been moved to a shrine at Keerimalai junction in proximity to the bathing ghat, lying seawords to the north of the junction

Patala Ganga flows only when there is rain. "(1)

The Valukkay Aru in Jaffna peninsula is the main flood water outlet commencing its run at Kattuvan via Tellipalai East, Alavetti, Kantarotai, Kattutai, Navali entering the lagoon at Kalluntai All surface Water runs southwards to the lagoon, the Underground flow is reversed from north of Kattuvan hence the flow of water from Patala Ganga in ancient times has been affected by an uplift which is ongoing in the Jaffna peninsula and northwest Sri Lanka permitting only overflow waters from the solution chambers in the limestone to run in the cave, following rain. Deeper still, the flow goes on until further uplift occurs. Nakuli would not have chosen this cave at that time were it not for the perennial source of fresh water amongst other factors stated earlier.

The shift of the Swayambulingam Amaresa to its present location has given legitimacy as well to the conjointing of nomenclature. 'T'his has been incidental to the reconstruction of Keerimalai Sivan Temple following severe damage by aerial bombing in the ongoing Eelam War III and heavy losses by looting in October 1990. The reconstruction is ongoing and, so is the war.

8542 c.

நன்றி - Rock Cave Temple of Thirukoneswaram and Sequelae

1) Brahmaguru Brahmashri K. Nakuleswara Kurukkal, 9th October 2001., (Personal communication)

KOHA JPL



202216

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நகுலேஸ்வரத்தில் ஆதியில் ஆலயம் இருந்த மலைப்பிரதேசம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org